வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 29.03.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 89 பக்கங்கள் : 12

# இராணுவத்தின் நிர்வாகத்தின் கீழ் ஒட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலை!

## புனரமைப்பையும் ஆரம்பித்தனர் படையினர்

முல்லைத்தீவு, மார்ச் 29

**ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை இராணுவ சமூக சேவையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அத்துடன், அந்தத் தொழிற்சாலையை புனரமைக்கும் பணிகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.**



நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு சென்ற இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார். இதன் போது, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்கும் சென்று அங்கு முன்னெடுக்கப்படும் புனரமைப்பு பணிகளையும் பார்வையிட்டார். இந்தத் தொழிற்சாலையை கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி முதல் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கூழாமுறிப்பில் அமைந்துள்ள இந்த ஓட்டுத் தொழிற்சாலை உள்நாட்டு போர் காரணமாக கடந்த 1983ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டது. எனினும், 2009ஆம் ஆண்டின் பின்னர் இந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயக்க மாறி மாறி வந்த அரசாங்கங்கள் உறுதியளித்தன. ஆனால், அவை எதுவும் நடக்கவில்லை.

இந்த நிலையிலேயே, இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் தொழிற்சாலையை இராணுவ சமூக சேவையின் கீழ் வழங்கியுள்ளது. இதைத்

11

## நாட்டின் மக்கள் தொகை முதன்முறையாக வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 29

சுதந்திரத்துக்குப் பின்னரான வரலாற்றில் முதல் தடவையாக நாட்டின் சனத்தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2023 ஜூன் 30ஆம் திகதியுடன் முடிவடைந்த ஓராண்டு காலப் பகுதியில் மக்கள் தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த மக்கள் தொகை ஒரு இலட்சத்து 44 ஆயி ரத்து 395ஆல் குறைவடைந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலைமைகளால்

11

## வலி. வடக்கில் வழிபாட்டுக்காக 7 ஆலயங்கள் விடுவிக்கப்பட்டன

### யாழ். ஒருங்கிணைப்பில் ஆளுநர்

யாழ்ப்பாணம், மார்ச் 29

அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் காணப்படும் 7 ஆலயங்கள் வழிபாடுகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின்

11

## நெருக்கடிகளுக்குத் தீர்வு காண ஆட்சி முறையில் மாற்றம் தேவை!

### கத்தோலிக்க ஆயர் பேரவை

கொழும்பு, மார்ச் 29

நாடு எதிர்கொள்ளும் பொருளாதார அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வை காண்பதற்கு நாட்டின் ஆட்சி முறையில் மாற்றங்கள் இடம்பெற வேண்டும் என்று கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

11

## கேப்பாபிலவு மக்களுக்கு ஏமாற்றம்!

முல்லைத்தீவு, மார்ச் 29

கேப்பாபிலவில் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி போராடி வருவோரை இராணுவ தளபதியை சந்தித்து பேச ஏற்பாடு செய்து தருவதாகக்கூறி பல மணி நேரம் காக்கவைத்து இராணுவம் ஏமாற்றியதாக

11

## இலங்கையர் ஒருவரின் அடிப்படைத் தேவைக்கு மாதாந்தம் 17,014 ரூபாய்!

கொழும்பு, மார்ச் 29

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கான வறுமைக்கோடு தொடர்பான புதிய அட்டவணையை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கையர் ஒருவரின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்தம் 17,014 ரூபாய் அவசியம் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய மட்டத்தில் இந்த தொகை அறிவிக்கப்பட்டிருந்தாலும், மாவட்டங்கள் தோறும் இந்த தொகையில் மாற்றம் ஏற்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் தனிநபரின் மாதாந்த செலவு 18,350 ரூபாவாக காணப்படுகின்றது.

இதற்கமைய, இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் அதிக செலவீனத்தைக் கொண்ட மாவட்டமாக கொழும்பு மாவட்டம் அமைந்துள்ளது.

குறைந்த செலவீனத்தைக் கொண்ட

11



## மைத்திரியை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு

கொழும்பு, மார்ச் 29

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்து தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு - மாளிகாகந்தை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

உயிர்த்த

11

# ஞானசார தேரருக்கு 4 வருட கடூழிய சிறை

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 29

கலகொட அத்தே ஞானசார தேரரு க்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட பெந்திகேயால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஞானசார தேரருக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் இரண்டு குற்றப்பத்திரங்களிலும் அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 2016ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூரகல விகாரை தொடர்பில் முஸ்லிம் மதத்தை இழிவுபடுத்தும் வகையில் வெளியிட்ட கருத்து, தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவித்ததாக வழக்கு தொடரப்பட்டிருந்தது. (அ)



## உக்ரைன் - ரஷ்ய போர் களத்தில் இலங்கையின் படைகள் இல்லை!

### ஓய்வுபெற்றவர்களே உள்ளனராம் என்கிறார் இராணுவ பேச்சாளர்!

கொழும்பு, மார்ச் 29

இலங்கை இராணுவத்தினர் தமது கடமையில் இருந்து விடுப்பு எடுத்து ரஷ்ய, உக்ரைன் படைகளுடன் இணைந்து போரில் ஈடுபடுகின்றனர் என்று வெளியான செய்திகளை இராணுவ பேச்சாளர் மறுத்துள்ளார்.

இராணுவத்தினர் கடமை விடுப்பு பெற்று ரஷ்ய, உக்ரைன் இராணுவங்களில் சேர்ந்து போரில் ஈடுபட்டு வருகின்றன என்று செய்திகள் வெளியாகின. இந்த நிலையிலேயே இந்த விடயத்தை இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் கே. ஏ. என். ரசிக்க குமார மறுத்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை

11

## விடுதியில் பெண்ணுடன் தனித்திருந்த பிக்கு கைது

கொழும்பு, மார்ச் 29

விடுதியில் பெண்ணுடன் தனித்திருந்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை - தியத்தலாவ பிரதேசத்தில் வைத்தே குறித்த பிக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த பிக்கு, பொரலந்த பிரதேசத்தில் உள்ள ஒரு விகாரையைச் சேர்ந்தவர் என்றும், அந்தப் பெண் அதே பகுதியில் வசிக்கும் திருமணமான பெண் எனவும் கூறப்படுகின்றது.

பெண்ணொருவர் மாற்றுப் பெயருடன் விடுதிக்கு வந்துள்ளதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்த சுற்றிவளைப்பு நடத்தப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டனர்.

## ஏப்ரல் 01, 02ஆம் திகதிகளில் கூடுகின்றது பாராளுமன்றம்!

கொழும்பு, மார்ச் 29

பாராளுமன்றத்தை எதிர்வரும் ஏப்ரல் 01ஆம் திகதி மற்றும் 02ஆம் திகதிகளில் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கடந்த மார்ச் 22 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கு அமைய ஏப்ரல் 01ஆம் திகதி திங்கட்கிழமை, மு.ப 9.30 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பதுடன், மு.ப 9.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரை 2024.03.19ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆயுர்வேத சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வுள்ளன. (இது தொடர்பான பிரேரணை 2024.04.01ஆம் திகதிய 14ஆம் இலக்க பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது).

இதனைத் தொடர்ந்து பி.ப 4.30 மணிக்கு தனிநபர் சட்டமூலமான சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாவது மதிப்பீட்டின் பின்னர் சட்டவாக்க நிலையியல் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

இதன் பின்னர் பி.ப 4.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை அரசாங்கத் தரப்பால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்புவேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

2024 ஏப்ரல் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணி முதல் பி.ப 4.00 மணி வரை வங்கித்தொழில் (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான 2358/70 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, சேர் பெறுமதி வரிச்சட்டத்தின் 2363/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான 2370/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பி.ப 4.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடத்தப்படவுள்ளது. (ஐ)

## கெஹலியவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 29

தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய உள்ளிட்டவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற இம்யுனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த விவகாரம் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய, அவரின் செயலாளர் உள்ளிட்ட 9 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று இவர்கள் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அனைவருக்கும் எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார் நீதிவான். (ஐ)

## பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 29

பண்டிகை காலத்தை முன்னிட்டு இலங்கை பொது சுகாதார பரிசோதகர்களால் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக சுமார் 1,500 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 365 சுகாதார வைத்திய பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்படுகிறது என்று சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண குறிப்பிட்டார்.

ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் இதன்போது பரிசோதிக்கப்படவுள்ளன. உணவு பதப்படுத்தும் நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் தொற்றுநோயால் பாதிக்கப்படவில்லை என்ற மருத்துவ அறிக்கையை வைத்திருப்பது கட்டாயம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## தேர்தல்கள் பிற்போடப்படும் என்பதை நிராகரிக்கிறோம்!

### வஜிர அபேவர்த்தன எம். பி.

கொழும்பு, மார்ச் 29



பாராமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் திருத்தச் சட்டமூலங்களால் எதிர்வரும் தேர்தல்கள் பிற்போடப்படும் என எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டை அரசாங்கம் முழுமையாக நிராகரிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்பின் பிரகாரம் உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சியினரிடம் கோஷங்கள் இல்லாததால், அரசாங்கம் தேர்தலை பிற்போடுவதாக போலியான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேர்தலை வலுவாக எதிர்கொள்ளும் பலம் ஜனாதிபதி தலைமையிலான அணிக்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டார். அனைவருக்கும் சமமான சட்டத்தை அமுல்படுத்துவதே எமது நோக்கமாகும்.

நாட்டின் பொருளாதாரத்தை கையாள்வது தொடர்பில் மேலும் சில விசேட சட்டமூலங்களை பாராளுமன்றில் சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததை அடுத்து, இனி பணத்தை அச்சிட முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

அரசமைப்பின்படி ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதன்பின்னர் அரசமைப்பின்படி பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் - என்றார்.

## நெகிழிக்கு பணம் அறவிட தடை வர்த்தமானி மீளப்பெறப்படும்!

கொழும்பு, மார்ச் 29

கடைகளில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது வழங்கப்படும் நெகிழி (ஷொப்பிங்) பைகளுக்கு கட்டணம் அறவிடுவதை தடை செய்து நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுவதாக சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

குறித்த வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்கு உட்படுத்தி சுற்றாடல் நீதி மையத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரசாங்கத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திருமதி அவந்தி பெரேராவினால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொருட்களைவாங்கும்போது நுகர்வோருக்கு கடைகளில் வழங்கப்படும் நெகிழிபைகளுக்கு சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகம் என சுற்றாடல் நீதி மையம் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தது.

அந்த பைகளுக்கு கட்டணம் வசூலித்தால், அவற்றின் பயன்பாடு தடைப்படும் என்றும், அதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பு குறையும் என்றும் மனுதாரர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

## அரிசி, வெங்காயத்துக்கான இறக்குமதி வரி குறைப்பு

கொழும்பு, மார்ச் 29

அரிசி மற்றும் இளஞ்சிவப்பு வெங்காய இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட வரி குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இளஞ்சிவப்பு வெங்காய இறக்குமதிக்கான வரி 10 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த வரிச்சலுகை ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மாத்திரமே அமுலில் இருக்கும் என வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் அரிசிக்கு ஒரு ரூபாயாக குறைக்கப்பட்ட விசேட வர்த்தக வரி ஏப்ரல் 3 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் வர்த்தக பொருட்களுக்கான வரியாக 65 ரூபாய் அறவிடப்பட்டது.

இது 2024 ஜனவரி 21 அன்று அல்லது அதற்கு முன்னர் இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெற்ற இறக்குமதியாளர்களுக்கே பொருந்தும்.

சுங்கக் குறியீடு 1006.30.29 இன் கீழ் ஏனைய அரிசி வகைகளில் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு இந்தச் சலுகை கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீரி சம்பாவுக்கு நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், அதற்கு இணையான அரிசியை இறக்குமதி செய்வதற்காகவே இந்த வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## இல்ல மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 29

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி எதிர்வரும் செவ் வாய்க்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மைதானத்தில் பாடசாலையின் அதிபர் க. தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ. யோகலிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் பா. பால மனோகரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

## கத்தரிக்கோலினால் தாக்கப்பட்டு கிராண்ட்பாஸில் ஒருவர் கொலை

கொழும்பு, மார்ச் 29

கத்தரிக்கோலால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் கொழும்பு கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபராவார்.

உயிரிழந்தவருக்கும் சந்தேகநபரொருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் எல்லை மீறியதில் சந்தேக நபர், இவரை கத்தரிக்கோலால் தாக்கியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் உயிரிழந்தவரது சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
29.03.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியலுக்கப்பால்?

நாம் தொடர்ந்தும் அரசியல் பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றோம். 'ஈழநாடு' ஆசிரியர் தலையங்கத்தை உற்றுநோக்கிவரும் பலரும் அரசியலுக்கு அப்பாலான விடயங்களிலும் 'ஈழநாடு' அதன் அவதானத்தை செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். குறிப்பாக, கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துதல் போன்ற விடயங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். அவர்களின் கவலைகளை நாம் விளங்கிக் கொள்கின்றோம்.

அரசியல் அதிகாரமின்றி ஒரு சமூகம் அதன் சமூக, பொருளாதார கட்டமைப்புகளை சுதந்திரமாக முன்னெடுக்க முடியாது. இந்த அடிப்படையிலேயே அரசியல்மீது பிரதான கவனத்தை செலுத்த வேண்டியிருக்கின்றது. அதற்காக ஏனைய விடயங்கள் பற்றி அக்கறை கொள்ளக்கூடாது என்பதல்ல பொருள்.

ஆனால், நமது அரசியல்வாதிகளை நோக்கி இவ்வாறான விடயங்களை பற்றிப் பேசுவதில் என்ன பொருள் உண்டு என்னும் கேள்வி உண்டு. அரசாங்கத்தை பொறுத்தவரையில் ஒரு எல்லைக்கு மேல் அதனால் விடயங்களை முன்னெடுக்க முடியாத நிலையிருக்கின்றது. எனவே, அரசாங்கத்தை நோக்கி கோரிக்கைகளை முன்வைப்பதில் எவ்வித பயனுமில்லை.

இந்த நிலையில், வடக்கு - கிழக்கில் தமிழ் சமூகம் தொடர்ந்தும் சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையை நோக்கியே சரிந்து கொண்டிருக்கின்றது. ஓரளவு புலம்பெயர் சமூகத்தில் உள்ளவர்களின் பல்வேறு சமூக மேம்பாட்டு செயல்பாடுகள் நம்பிக்கையளிக்கின்றன.

குறிப்பாக, பின்தங்கிய பகுதிகளில் மாணவர்களின் கல்வி நிலையோ மிகவும் மோசமான நிலையிலிருக்கின்றது. இந்த விடயத்தில், முன்னேறிய தமிழ் சமூகம் வடக்கு - கிழக்கின் பின்தங்கிய பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தங்களுடைய உதவிகளை கல்வி மேம்பாட்டை நோக்கி குவிப்பதற்கு முன்வர வேண்டும். இல்லாவிட்டால், அரசியல் அதிகாரம் ஒரு காலத்தில் கிடைத்தால்கூட அதனை பயன்படுத்துவதற்கும் - வழிநடத்துவதற்கும் நம்மிடம் ஆளுமையுள்ள ஒரு தலைமுறை இருக்காது. வசதியுள்ள தமிழ் மத்தியதர வர்க்கம் வெளிநாடுகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. வசதியில்லாத ஒரு மக்கள் கூட்டமே தேசியத்தின் பெயரால் மிஞ்சப்போகின்றது.


இந்த நிலையில் வெளியேறுபவர்களைப் பற்றி கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை - அவர்கள் வெளியேறத்தான் போகின்றனர். ஒரு வேளை கனடா இந்த வீசா நடைமுறையை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தினால் இன்னும் ஐந்து வருடங்களில் இலட்சக் கணக்கானவர்கள் வெளியேறிவிடுவர்.

இந்த நிலையில் வசதியுள்ள புலம்பெயர் சமூகத்தின் மூத்த தலைமுறை - இதேவேளை, தாயக ஏழை மக்களின் நலனில் அக்கறையுள்ள புலம்பெயர் அமைப்புகள் தனிநபர்கள் ஒவ்வொரு வரும் கல்வியில் பின்தங்கிய பகுதிகளை அடையாளம் கண்டு அங்குள்ள பாடசாலைகளில் கல்விக்கான வசதி வாய்ப்புகளை பெருக்குவதற்கு உதவி செய்ய முன்வரவேண்டும். உள்ளூர் அமைப்புகள் மற்றும் தனிநபர்களுடன் இணைந்து இவ்வாறான பகுதிகளையும் அங்குள்ள பிரச்னைகளையும் முதலில் அடையாளம் காண வேண்டும். தாயக கல்வி மேம்பாட்டுக்கான நிதி என்னும் ஒரு நிதியத்தை புலம்பெயர் சூழலில் உருவாக்க வேண்டும். இதில், அரசியல் தேவையற்றது. அனைவரின் உதவியுடனும் இதனை முன்னெடுக்கலாம். வெறும் தேசிய சுலோகங்கள் ஏழை மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு பயன்படாது. கல்வியை இழந்தால் - பின்னர் தமிழ் சமூகம் இறுதியில் அனைத்தையும் இழந்துவிடும்.

# உன்னத தியாகத் திருநாள்!

**கத்தோலிக்க மக்களின் புனித வெள்ளி இன்றாகும். இதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

**மரியதாஸ் விக்ரோறியா**



புனித வெள்ளி இது ஓர் உன்னத தியாகத் திருநாள் பிலாத்து இயேசுவை விசாரணை செய்தபோது மக்கள் கூட்டத்துக்கு அஞ்சி இயேசுவுக்கு மரண தண்டனை அளிக்கி றான். யூதருக்கு அஞ்சி நிக்கதேமு ஓர் இரவு இயேசுவிடம் வருகிறார். சீமோன் பேதுரு உலகுக்கு அஞ்சி இயேசுவை மும்முறை மறுதலிக்கிறார். இன்றும் இதைப்போன்று உலகின் மாயவலையில் சிக்கி இயேசுவை மறுதலிப்போர் உள்ளனர்.

ஆண்டவர் இயேசுவை மறுதலித்ததை சீமோன் பேதுரு கண்ணீர் சிந்தி வருந்தி அழுகின்றார். இயேசுவுக்கு சிலுவைச் சாவு எதிர்பாராத நிகழ்வாக இருக்கவில்லை அவர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த நாள் முதல் இந்த நாளுக்காகவே தம்மை ஆயப்படுத்தினார். அவர் தமது சாவை ஏற்கனவே அறிந்திருந்தார்.

மானிட மகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர் தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித்தள்ளப்பட்டு கொலை செய்யப்படவும் அறிந்திருந்தார். மனிதனின் ஆணவம் கீழ்ப்படியாமைக்கு இறைமகன் இயேசு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு தம்மைத் தாழ்த்திக் கொண்டார்.

இயேசு சாத்தானை வென்று தொடர்ந்து அன்பு செய்தார். மன்னித்து கீழ்ப்படிந்து வாழ்ந்தவர் இயேசு. பாவ உலகில் மனித அவதாரம் எடுத்து எம்மை மீட்டார். நம்மோடு இருக்கும் இறை பிரசன்னத்தை உணர்ந்து கொள்ளாது தான் நமது துன்பத் துக்கக் காரணம் மானிட சமூகம் தவறிய பொழுதெல்லாம் அவர்களைக் காப்பாற்றத் தயாராக இருக்கிறார்.

அப்பேற்பட்ட இறைவன் சிலுவையில் தொங்கும் காட்சியை அவரின் அன்னையை உருக்குலைய வைத்தது தம் வாயைத் திறவாத - தம் மாசற்ற திருமகனை சந்தித்தது - இரத்த வியர்வை காயத்தழும்புகளால் உரு மாறிய தம் தெய்வமகனின் கோரக் காட்சியை கண்டதும் அந்தத் தாயின் இதயம் நொறுங்கியது.

குற்றவாளியாய் தீர்ப்பிடும்போதும் ஆணிகளை வைத்து அடிக்கும் போது - மகன் எழுப்பிய வேதனைக் குரலைக் கேட்கும்போது அன்னை பட்ட வேதனை அளவிட முடியாது. "என் இறைவா... என் இறைவா... ஏன் என்னைக் கைவிட்டீர்...", என்று மகன் கதறும்போது தாயின் விசுவாசம் கடுமையாக சோதிக்கப்பட்டது.

நேர்மையற்ற தலைவர்களின் உள்ளம் பாறையெனக் காணப்பட்டது. அப்பாவி பெண்களின் உள்ளம் குமுறியது. இயற்கையே தன் அதிர்ச்சியை வெளிப்படுத்தியது. பூமியின் விடிவை அறிவிப்பவன் ஒளியைக் கொடுக்க மறுத்தான். இயேசு சிலுவையில் உயிர் துறந்தார்.

# யாழ். - ருகுணு பல்கலை அணிகளின் 'சகோதரர்களின் போர்' துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் பிரதான அனுசரணையில் யாழ்ப்பாணம் - ருகுணு பல்கலைக்கழகங்களின் துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் ருகுணு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.


சகோதரர்களின் போர் என பெயரிடப்பட்டுள்ள இந்தத் துடுப்பாட்டப் போட்டி 40 ஓவர்கள் கொண்டதாகும். முதல் நாள் போட்டியில் பல்கலைக்கழக அணிகள் மோதும், தொடர்ந்து மறுநாள் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான நட்பு ரீதியான போட்டியும், பல்கலைக்கழக மாணவிகள் பங்கெடுக்கும் மகளிர் துடுப்பாட்டப் போட்டியும், 20 ஓவர்கள் கொண்டதாக அமையும்.

பல்கலைக்கழக மாணவர்களிடையே நட்புறவை ஏற்படுத்துவதன் ஊடாக சமூக நல்லிணக்கத்துக்கான முயற்சிக்கு லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிறுவுநர் சுபாஸ்கரனின் வழிகாட்டலில் துடுப்பாட்ட போட்டிக்கான பிரதான அனுசரணை வழங்கப்படுவதுடன், வெற்றி பெறும் அணிக்கான லைக்கா வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் லைக்கா ஞானம் அறக்கட்டளையின் - அல்லிராஜா நிறைவகம் ஊடாக மேற்கொள்ளப்படும் மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் செயல் திட்டம், ருகுணு பல்கலைக்கழகத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 29 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 16
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிடைக்கும். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினரின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களின் பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். மனசாட்சி படி செயல்பட வேண்டிய நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை நீங்களே செய்து முடிப்பது நல்லது. உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விவாதம் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். மதிப்புக்கூடும் நாள்.

**மகரம்**
சொந்த பந்தங்கள் கேட்ட உதவியை செய்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

# விடுதலை புலிகள்மீதான தடையை நீக்க வேண்டும்

## நாம் தமிழர் கட்சி அறிக்கை

சென்னை, மார்ச் 29

விடுதலை புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மத்திய அரசு நீட்டிப்பது முறையல்ல. அதனை நீக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டில் ஏப்ரல் 19ஆம் திகதி வாக்குப் பதிவு நடக்கிறது. இந்தத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி தமிழ்நாடு, புதுச்சேரியில் 40 தொகுதிகளில் "மைக்" சின்னத்தில் போட்டியிடுகிறது.

அந்தக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்,

பாரதிய ஜனதா, காங்கிரஸ் இரண்டுமே ஒற்றை நாணயத்தின் இரட்டை முகங்கள் போன்றவை. இந்த இரு கட்சிகளையும் புறந்தள்ளி, மாநிலக் கட்சிகள் ஒருமித்து மத்தியிலே ஒரு கூட்டாட்சியை அமைப்பதுதான் தேசிய இனங்கள் இடையேயான ஒருமைப்பாட்டுக்கும், மாநிலங்களில் நலன்களுக்கும் ஏற்றதாகும். அதனை நோக்கியே நாம் தமிழர் கட்சி பயணிக்கிறது.

அவரவர் நிலத்தை அவரவர் ஆள்வோம். இந்தியாவை கூடிப் பேசி ஆள்வோம் என்ற பெரும் முழக்கத்துக்கேற்ப தேசிய இனங்களின் தாயகங்களான மாநிலங்களை மண் மீதும், மக்கள் மீதும் பற்றுறுதி கொண்ட அந்தந்த மாநிலக் கட்சிகளே ஆள வேண்டும்.

கச்சதீவு ஒப்பந்தத்தை நீக்கம் செய்து தமிழ்நாட்டின் நிலவுரிமையையும், மீனவர்களின் மீன்பிடி உரிமையையும் நிலை நாட்ட அனைத்து தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும் - என்றுள்ளது. (ஐ)

# ம. தி. மு. க, விடுதலை சிறுத்தைகள், நாம் தமிழருக்கு சின்னங்கள் மறுப்பு

சென்னை, மார்ச் 29

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கேட்ட பானை, ம. தி. மு. க., பொதுச் செயலர் வைகோ கேட்ட பம்பரம், நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேட்ட படகு சின்னம் என்பவற்றை வழங்க தேர்தல் ஆணையமும் நீதிமன்றமும் மறுத்துவிட்டன. இதனால், அந்தக் கட்சிகளின் வேட்பாளர்கள் வேறு சின்னத்தில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எந்தத் தேர்தலிலும் இல்லாத அளவுக்கு இந்தத் தேர்தலில் சின்னம் பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. அங்கீகாரம் பெற்ற கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள நிரந்தர சின்னம் உண்டு. இதில், அந்தக் கட்சி வேட்பாளர்கள் போட்டியிடுவர். பதிவு செய்து, ஆனால் அங்கீகாரம் பெறாத கட்சிகள், பொது சின்னம் பெற, குறிப்பிட்ட காலத்துக்குள் விண்ணப்பித்தால், முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

விண்ணப்பிக்காத கட்சிகள் மற்றும் சுயேச்சைகள், தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள 193 சுதந்திர சின்னங்களில் ஏதேனும் மூன்று சின்னங்களை தெரிவு செய்து வேட்புமனுவில் குறிப்பிட வேண்டும்.

வேட்புமனு மீளப்பெறும் நேரம் முடிந்த பின், அவரவர் கேட்ட மூன்றில் ஏதாவது ஒரு சின்னம் ஒதுக்கப்படும். ஒரே சின்னத்தை இரண்டு, மூன்று பேர் கேட்டால், குலுக்கல் முறையில் ஒதுக்கப்படும். இதுவே சின்னம் ஒதுக்கும் நடைமுறை.

இந்த நிலையிலேயே, ம. தி. மு. க., விடுதலை சிறுத்தைகள், நாம் தமிழர் கட்சிகள் வழக்கமாகப் போட்டியிட்ட சின்னங்களில் போட்டியிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. (ஐ)

# தமிழுக்கான முக்கியத்துவம் தி. மு. க. ஆட்சியில் இல்லை!

## இந்து முன்னணி குற்றச்சாட்டு

திருப்பூர், மார்ச் 29

தி. மு. க. ஆட்சியில் தமிழுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை என இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தி. மு. க. ஆட்சியில் அரசு கட்டடங்களில் மட்டுமே 'தமிழ் வாழ்க' என்ற பதாகை மின்னொளியில் பளிச்சிடுகிறது. தமிழர்கள் வீட்டிலும், மூளையிலும் ஆங்கிலம் திணிக்கப்பட்டுள்ளது.

தி. மு. க. தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு. க. ஸ்டாலின், சென்னை முதல்வராக இருந்த போது தான் மாநகராட்சி பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி திணிக்கப்பட்டு பரவலாக்கப்பட்டது. சிறுபான்மையினர் பள்ளிகளில் தமிழ் சிறப்புப் பாடமாக, மூன்றாவது மொழியாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், தமிழ் மொழி சிறப்பு பாடத் தேர்வில் இது வரை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ் படிக்காமலேயே பள்ளிப்படிப்பை மாணவர்கள் முடிக்கும் வேடிக்கை, தி. மு. க. ஆட்சியில் நடைபெற்று வருகிறது. தி. மு. க. ஆட்சியில், தமிழுக்கு எந்த முக்கியத்துவமும் தரப்படவில்லை - என்றுள்ளது. (ஐ)

# ஏப்ரலில் மோடி தமிழகத்தில் பிரசாரம்!

சென்னை, மார்ச் 29

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ள பிரதமர் மோடி அடுத்த மாதம் தமிழகம் வர வுள்ளார்.

தமிழகத்தில் பிரசாரம் சூடு பிடிக்க தொடங்கி இருக்கிறது. எனவே, தமிழகத்தில் மோடி பிரசாரம் மேற்கொள்ளும் வகையில் சுற்றுப்பயணத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

பிரசாரத்துக்காக தமிழகத்துக்கு 3 முறை மோடி வர வாய்ப்புள்ளது என்று கூறப்படுகின்றது. எனினும், அவரின் பயணத்திட்டங்கள் குறித்து இதுவரை எந்தவேர் அதிகார பூர்வ அறிவிப்பும் வெளியாக வில்லை. (ஐ)

# இலங்கையில் சிறைப்பட்ட மீனவர்களை மீட்க வேண்டும்!

சென்னை, மார்ச் 29

இலங்கையில் சிறைபட்டுள்ள மீனவர்களை மத்திய அரசு தலையிட்டு மீட்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் ரா. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் போது இலங்கை கடற்படையும், கடல் கொள்ளையர்களும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். மீனவர்கள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என உறுதியளித்த பா. ஜ. கவின் பத்தாண்டு காலமும் மீனவர்கள் பாதுகாப்பு உறுதி செய்யப்படவில்லை.

அண்மையில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற இராமநாதபுரம், நாகபட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களையும், புதுச்சேரி, காரைக்கால் மீனவர்களை இலங்கை கடற்படை சிறைப்பிடித்துள்ளது.

இலங்கை கடற்படையின் தாக்குதல்களை தடுக்க பா. ஜ. க. எந்த முடிவும் எடுக்கவில்லை. அவர்களை விடுதலை செய்து தமிழ்நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# விமல், கம்மன்பில, டலஸ் தரப்புக்கு மொட்டு வலை?

## பேச்சுக்கு அழைக்க கோருகிறார் எஸ்.பி.

கொழும்பு, மார்ச் 29

**பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான கூட்டணியில் இருந்து வெளியேறியுள்ள டலஸ் அழகப்பெரும, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோரை மீண்டும் இணைத்துகொள்வதற்கான பேச்சுகளை மகிந்த ராஜபக்ச உடன் ஆரம்பிக்க வேண்டும் என்று மொட்டு கட்சி பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் கூறியவை வருமாறு-விமல், உதய கம்மன்பில, டலஸ் போன்றவர்கள் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய வேண்டும். இல்லையேல் எமது பக்கம் வர வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்களால் நாடாளுமன்றம் வர முடியாது.

மேற்படி தரப்புகளை எமது கட்சி இணைத்துக்கொள்ள வேண்டும் என்பது மிக முக்கியம். அதற்கான வேண்டுகோளை நான் விடுத்துள்ளேன். பேச்சு ஆரம்பமாகும் என நம்புகின்றேன்.




இவர்களை இணைப்பதற்கான பேச்சை கட்சி தலைவர் என்ற ரீதியில் மஹிந்த ராஜபக்ச உடன் ஆரம்பிக்க வேண்டும்-என்றார்.

(அ)

# செப். 18 ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதே பொருத்தமானது!

## முன்னாள் தேர்தல் ஆணையாளர் யோசனை

கொழும்பு, மார்ச் 29

“ மக்கள் தேர்தலை கோருவதால் செப்ரெம்பர் 18 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலை நடத்துவது பொருத்தமான காலப்பகுதியாக அமையும்.” என்று தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

“உங்கள் அனுபவத்தின் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு பொருத்தமான காலப்பகுதி எதுவென கருதுகின்றீர்கள்.” என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு- செப்ரெம்பர் 17 மற்றும் ஒக்ரோபர் 17 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். அப்படியானால் செப்டம்பர் நடுப்பகுதிதான் மத்திய காலப்பகுதியாக அமையும். எனவே, செப்ரெம்பர் 25 மற்றும் 30 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நடத்தப்படலாம்.

ஆனால் மக்கள் விரைவில் தேர்தலை எதிர்பார்ப்பதால் செப்ரெம்பர் 18 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுவதையே மக்கள் விரும்புகின்றனர். அதற்கு மக்களும் தயார்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் திகதியை தேர்தல் ஆணைக்குழுவாலேயே அறிவிக்கப்படும். தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஒன்றுகூடியே திகதியை தீர்மானிப்பார்கள். இதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கே உள்ளது-என்றார்.

(அ)

# சாரதி தூங்கியதால் விபத்து



கொழும்பு, மார்ச் 29

நீர்கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கி அதிவேகமாக பயணித்த கார் ஒன்று நேற்று காலை வீதியை விட்டு விலகி 20 அடி பள்ளத்தில் தேயிலை தோட்டத்திற்கு செல்லும் வீதியில் கவிழ்ந்ததில் விபத்து ஏற்பட்டதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் குடாகம பகுதியில் நேற்று காலை எட்டு மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதிவேகமாக பயணித்த கார் பிரதான வீதிக்கு அருகில் இருந்த தொலைபேசி கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் கார் கவிழ்ந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஹற்றன் பொலிஸார், காரின் சாரதிக்கு நித்திரை ஏற்பட்டமையே இவ்விபத்துக்கு காரணமென சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

(அ)

# ரொஷான் ரணசிங்க வழக்கை விசாரிக்க புதிய நீதிபதிகள் குழு!

கொழும்பு, மார்ச் 29

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நாடாளுமன்றில் வெளியிடப்பட்ட அறிக்கையினால் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறி அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்னவினால் புதிய நீதிபதிகள் குழாம் நேற்று முன் தினம் நியமிக்கப்பட்டது.

இதன்படி, மனுவை விசாரிப்பதற்காக மொஹமட் லாபர் மற்றும் சாமத் மொரேஸ் ஆகியோர் அடங்கிய புதிய நீதிபதிகள் குழாம் ஒன்றை நியமித்து மேன்முறையீட்டுத் தலைமை நீதிபதி உத்தரவிட்டார்.

முகமது லாபர் மற்றும் கேமா ஸ்வர்ணாதிபி ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்பு இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிபதி கேமா ஸ்வர்ணாதிபி ஓய்வு பெற உள்ளதால், இந்த மனுவை விசாரிக்கும் குழுவிலிருந்து ஒதுங்குவதாக குறிப்பிட்டு, இந்த மனுவை விசாரிக்க புதிய குழுவை நியமிக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரிடம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இதன்படி, குறித்த மனு நேற்று முன் தினம் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது. அங்கு மேல்முறையீட்டுத் தலைவர் இந்த புதிய நீதிபதிகள் குழுவை பெயரிட்டார்.

திமித்ரி ஷிராஸ் அகஸ்டஸ் பித்ராஞ்சலி என்ற சட்டத்தரணியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டதுடன், பிரதிவாதியாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பெயரிடப்பட்டிருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் நடவடிக்கைகள் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் ரொஷான் ரணசிங்க பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்டதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(அ)

# ஐ.நாவுக்கு முன் போலி உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட தரப்பே எட்காவை எதிர்க்கின்றது!

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 29

ஐ.நா. அலுவலகம் முன்பாக போலி உண்ணாவிரதத்தை முன்னெடுத்த தரப்பே தற்போது எட்கா உடன்படிக்கை தொடர்பிலும் கொக்கரிக்கின்றன. எனவே, இவ்வாறானவர்களில் உருவாக்கப்படும் மாயைகளுக்கு மக்கள் ஏமாறக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

எம்.சி.சி. உடன்படிக்கைக்கு எதிராக கோஷம் எழுப்பினர். 8 வருடங்கள் பின்நோக்கி சென்றோம். தற்போது எட்கா உடன்படிக்கை தொடர்பில் மக்களை ஏமாற்றுவதற்கு மாயையை உருவாக்கி வருகின்றனர். இன்னும் எத்தனை வருடங்கள் பின்நோக்கி செல்ல நேரிடுமோ தெரியவில்லை.

ஐ.நா. அலுவலகம் முன் சென்று படுத்து, தலையணையின்கீழ் உணவு வைத்துக் கொண்டு போலி உண்ணாவிரதம் இருந்தவர்களே இவ்வாறு செயற்படுகின்றனர். எனவே, போலி மாயைகளுக்கு ஏமாறுவதா என்பது தொடர்பில் மக்களே தீர்மானிக்க வேண்டும்-என்றார்.

(ஐ)

# உயிரிழந்தவரின் நுரையீரலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பல்!

கொழும்பு, மார்ச் 29

நிமோனியா காய்ச்சலில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த ஒருவரின் நுரையீரலில் இருந்து பல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பலாங்கொடை வலேபொட பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய சுதுஹக்குறு கருணாரத்ன என்பவர் நிமோனியா காய்ச்சலில் பாதிக்கப்பட்டு அண்மையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் பிரேத பரிசோதனை நீதிமன்றத்துக்கான வைத்திய அதிகாரி சேத்தி சத்யா முன்னிலையில் திடீர் மரண பரிசோதகர் பத்மேன்தர விஜயதிலக்கவினால் பலாங்கொடை வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது உயிரிழந்தவரின் நுரையீரலில் இருந்து பல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் அவரது குடும்பத்தாரிடம் வினவியபோது, சில வருடங்களுக்கு முன்பு குறித்த நபரின் பல் விழுந்து காணாமல் போயிருந்தாக தெரிவித்தனர்.

இந்த நிலையிலிலேயே அவரது பல் நுரையீரலில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ)

# அவுஸ்திரேலிய தூதர் மன்னாருக்கு விஜயம்

மன்னார், மார்ச் 29

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீவன் நேற்று மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டார்.

மன்னாருக்கு சென்றிருந்த அவுஸ்திரேலிய தூதுவர் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையிலான குழுவினரை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மன்னாரிலுள்ள தனியார் விடுதியொன்றில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

பின்னர் அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீவன், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கான அலுவலகத்திற்கு சென்றிருந்தார்.

இதன்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்கள் மற்றும் அவுஸ்திரேலிய நிதியுதவியில் திட்டங்களை அமுல்படுத்திய நிறுவனங்களுடனும் அவர் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

(அ)

# மொட்டுக் கட்சியின் கூட்டத்தில் குழப்பம்?

## அமைச்சர்கள் எதிர்ப்பு வெளியிட்டதால் பரபரப்பு

கொழும்பு, மார்ச் 26

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அதிகார பூர்வ இல்லத்தில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் குழப்ப நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.**

கூட்டத்தின் நிறைவில் கட்சியின் இரண்டு தரப்புக்கு இடையில் முரண்பாட்டு நிலை ஏற்பட்டு, அது வாய்த்தர்க்கமாக மாற்றமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் சமூக ஊடகப் பிரதானி ஒருவருக்கும், சில அமைச்சர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

சில அமைச்சர்கள் ஜனாதிபதிக்காக கூடுதலாக குரல் கொடுப்பதாக சமூக ஊடக பிரதானி குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது சில அமைச்சர்கள் குறித்த நபரின் கருத்தை எதிர்த்துள்ளனர்.

அமைச்சர்களான காஞ்சன விஜேசேகர, பிரசன்ன ரணதுங்க, பிரமித்த பண்டார தென்னக்கோன், பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட சிலர் இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதனால் கட்சிக் கூட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

# தொலைபேசிகளுக்கு வரும் குறுஞ்செய்தியால் ஆபத்து!

## பண்டிகை காலப் பரிசுகள் குறித்து



கொழும்பு, மார்ச் 29

பண்டிகைக் காலங்களில் பிரபல நிறுவனங்களின் வர்த்தக நாமங்களைப் பயன்படுத்தி சமூக வலைத்தளங்கள் ஊடாக பெரும் மோசடி இடம்பெற்று வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பொதுமக்களின் தகவல்களை பெறும் மோசடி சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக இலங்கை கணினி அவசர பதில் மன்றம் தெரிவித்துள்ளது.

பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும் என்று கையடக்கத் தொலைபேசிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பி தரவுகள் பெறப்படுவதாக அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தம்மபொல குறிப்பிட்டார்.

இந்த வருடம் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மாத்திரம் 200 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் தெரிவித்தார். (அ)

# கை, கால் மற்றும் வாய் வைரஸ் நோயால் பாதிக்கப்படும் சிறுவர்

கொழும்பு, மார்ச் 29

கை, கால் மற்றும் வாய் வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொரளை சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

குழந்தைகளுக்கு வாயில் சிவப்பு புள்ளிகள் அல்லது மூட்டுகளில் வெள்ளை நீர் கொப்புளங்கள், காய்ச்சல் ஏற்பட்டால் இது ஒரு வைரஸ் நோய் என்பதினை பெற்றோர்கள் அவதானிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நோய் அறிகுறிகள் தென்படும் போது பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பாடசாலை, முன்பள்ளி மற்றும் பகல்நேர பராமரிப்பு மையங்களுக்கு அனுப்புவதை தவிர்க்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

மேலும் கை, கால் மற்றும் வாய் வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நோய் தொற்று சுமார் மூன்று நாட்களுக்கு நீடிக்கும் என்றும், இதற்கு பரசிட்டமோல் மாத்திரைகள் அல்லது பரசிற்றமோல் சிரப் என்பன பரிந்துரைக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தூசி நிறைந்த சூழல் காரணமாக ஆஸ்துமா மற்றும் இருமல் தொற்று குழந்தைகளிடையே அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புத்தூர் ஆரம்ப மருத்துவ நிலையத்தின் செயல்பாடுகள் வழமைக்குத் திரும்பின!

யாழ்ப்பாணம், மார்ச் 29

புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் நேற்று முதல் வழமைக்கு திரும்பியுள்ளன.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நடவடிக்கைக்கேற்ப சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய மருத்துவ பராமரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பமானது.

புத்தூர் சந்தியில் உள்ள ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்துக்கு அருகில் ஆலய திருவிழாவொன்றுக்காக தண்ணீர்ப் பந்தல் அமைத்த இளைஞர்கள் ஒலிபெருக்கியை அதிக சத்தத்தில் ஒலிக்கவிட்டிருந்தனர்.

கடந்த ஆண்டும் இதே போன்று நடந்து ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலைய கண்ணாடிகள் உடைக்கப்பட்டு சேவைகளுக்கு இடையூறும் விளைவிக்கப்பட்டு, பின்னர் சட்ட நடவடிக்கை மூலம் வழமைக்கு கொண்டுவரப்பட்டு மருத்துவ சேவைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் இம்முறையும் ஆலயத்திற்கு ஒலிபெருக்கி பாவனை அனுமதி வழங்கப்பட்டு மருத்துவ பராமரிப்பு நிலையத்தின் சேவைக்கு இடையூறு செய்யும் வகையில் அதிக சத்தமாக பாடல்கள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வைத்திய சாலை வைத்திய அதிகாரியினால் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் முறையிடப்பட்டது.

முன்னைய சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தலையீட்டினால் அவ் வைத்தியர் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நடவடிக்கைக்கேற்ப சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய மருத்துவ பராமரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பமாகின. (அ)

# பொதுஜன பெரமுன வீழ்ச்சியடையவில்லை!

## எஸ். எம் சந்திரசேன கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 29

யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்து பயங்கரவாதத்தை இல்லாதொழித்து மக்களுக்கு சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்த பொதுஜன பெரமுன கட்சியால் மாத்திரமே மனித உரிமைகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட முடியும் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுன எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள தயாராகவே உள்ளது. பலமிக்க கட்சியாக எமது வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.கட்சியை வெற்றியடைய செய்வதற்கான நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளோம்.பொதுஜன பெரமுன வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் கட்சிக்குள் உறுப்பினர் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் எதிர்த்தரப்பினர் விமர்சிக்கின்றனர். பொதுஜன பெரமுன வீழ்ச்சியடையவில்லை.

வீடுகளுக்கு தீ வைத்தல் கொலை செய்தல் போன்ற வன்முறையில் ஈடுபடுவது எமது கட்சியின் கொள்கை அல்ல. நாம் உறுப்பினர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்துபவர்களும் அல்ல. வரலாற்றில் தேர்தல்களில் நாம் வாக்களிப்பு மோசடிகளில் ஈடுபடுபவர்களும் அல்ல.



மஹிந்த ஆட்சிக்காலத்தில் இவ்வாறான விடயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டன.

நாட்டில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் இன்று ஜனநாயக உரிமை தொடர்பிலும் மனித உரிமைகள் தொடர்பிலும் பேசுவது வேடிக்கையாக உள்ளது. ஏனென்றால் மனித உரிமைகள் தொடர்பில் பொதுஜன பெரமுனவுக்கு மாத்திரமே பேசமுடியும். யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்து பயங்கரவாதத்தை இல்லாதொழித்து மக்களுக்கு சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்தவர் எமது கட்சியின் தலைவராவார்-என்றார்.

# ஆபாச, நிர்வாணப் படங்கள் குறித்து முறைப்பாடு வழங்க புதிய வழிமுறை



கொழும்பு, மார்ச் 29

சிறுவர்களின் ஆபாசக் காணொளிகள் மற்றும் நிர்வாண புகைப்படங்களை இணையத்தில் பதிவேற்றுவது தொடர்பான முறைப்பாடுகளைப் வழங்குவதற்கு புதிய முறைமையொன்றை நேற்று வியாழக்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இணையத்தளத்தினூடாக இன்று முதல் இது தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படும் என அதன் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பெறப்படும் முறைப்பாடுகள் நேரடியாக இங்கிலாந்தில் உள்ள "Internet Watch Foundation" க்கு தெரிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்புடைய ஆபாசமான காணொளிகள் மற்றும் நிர்வாணப் புகைப்படங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளது.

மேலும், இந்த முறைப்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் யார் என்பதைக் கண்டறிந்து, சர்வதேச பொலிஸார் மூலமாகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் சிறுவர்களின் ஆபாசமான காணொளிகள் மற்றும் நிர்வாண புகைப் படங்கள் இணையத்தில் வெளியானமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச அதிகாரிகளினால் பெருமளவு நிதி வீணடிப்பு

## புதிய ஆய்வில் தகவல்

கொழும்பு, மார்ச் 29

**அரச அதிகாரிகளின் செயற்பாடு காரணமாக பாரியளவு நட்டம் ஏற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரசவாகனங்களை முறையற்றவகையில் பயன்படுத்தப்படுவதினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

**அரச வாகனங்களால் வருடம் ஒன்றுக்கு 20 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.**

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை இயக்குவதற்கு ஒரு கிலோமீட்டருக்கு சுமார் 300 ரூபா செலவாகும் என போக்குவரத்துக்கான துறைசார் கண்காணிப்புக் குழுவில் தெரியவந்துள்ளது.

எனினும், அதனை 100 ரூபாயாக குறைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது வளங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக மனிதவள மற்றும் பாதுகாப்புத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட தரவுகளின்படி இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

2022ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களின்படி, அரசாங்க நிறுவனங்களில் சுமார் 82,000 வாகனங்கள் உள்ளன.

சுமார் 76,000 வாகனங்கள் இயங்கும் நிலையில் உள்ளதாகவும், சுமார் 5,500 வாகனங்கள் இயங்காத நிலையில் இருப்பதாகவும் இதன் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும், இயங்கும் நிலையில் வாகனம் ஒரு கிலோமீற்றர் ஓடுவதற்கு சுமார் 300 முதல் 500 ரூபாய் வரை செலவாகும் என தெரியவந்துள்ளது.

ஆனால், அரச நிறுவனங்களுக்குத் தேவையான வாகனங்களை குத்தகை அடிப்படையில் தனியாரால் பெற்றுக் கொண்டால், 100 ரூபாய் அல்லது அதற்கும் குறைவான விலையில் ஒரு கிலோமீற்றரை ஓட்ட முடியும் என தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, அரச நிறுவனங்களுக்கு சொந்தமான வாகனங்களை முறையாக அகற்றி இந்த நடைமுறையை பின்பற்றினால், அரச செலவீனத்தில் நேரடியாக சுமார் 20 பில்லியன் ரூபாயை சேமிக்க முடியும் என தெரியவந்துள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தனவின் தலைமையில் உபகுழுவொன்றை நியமித்து இந்த அறிக்கையை ஆழமாக ஆராய்ந்து பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட தலைமையில் எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் கண்காணிப்புக் குழு பாராளுமன்றத்தில் கூடிய போது இந்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(அ)




# புத்தரின் படம் பொறித்த முடிவெட்டும் இயந்திரத்தை வைத்திருந்தவர் கைது!

கொழும்பு, மார்ச் 29

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் புத்தர் படத்தை அச்சிட்ட வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 முடி வெட்டும் இயந்திரங்களுடன் சந்தேகநபர் ஒருவர் ஜாஎல நகரில் உள்ள பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக கைது செய்யப்பட்டதாக ஜாஎல பொலிஸார் தெரிவித்தனர்.

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில், வெள்ளி வர்ணம் பூசப்பட்ட இந்த முடி வெட்டும் இயந்திரங்களை கொள்வனவு செய்பவருக்கு, விற்பனை செய்ய காத்திருந்த சந்தேக நபரை கைது செய்ய முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 35 வயதான கொட்டுகொட, நடகம, தபால் பெட்டி வீதியில் வசிக்கும் நபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# சட்டவிரோத செயல்பாடுகளால் சுற்றுலாப் பயணிகள் அச்சம்!

கொழும்பு, மார்ச் 29

நாட்டில் அமைதியற்ற சூழல்நிலை ஏற்படுமானால் அது சுற்றுலாத்துறையின் வளர்ச்சியில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் என பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென் மாகாணத்தில் இடம்பெறும் பாதாள உலக செயல்பாடுகள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் சுற்றுலாப் பயணிகள் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, பெந்தர, அஹூங்கல்ல, கொஸ்கொட, ரத்கம, ஹிக்கடுவ போன்ற பகுதிகளில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களால் சுற்றுலாப் பயணிகள் அதிர்ச்சியடைந்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார். ஐரோப்பா போன்ற நாடுகளில் மக்கள் அமைதியான சூழலில் வாழ விரும்புகின்ற போது, இங்கு துப்பாக்கிச் சூடு சத்தத்தை



பார்த்து அவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், சுற்றுலா பயணிகளுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதும் மிகவும் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். இதனால் சுற்றுலாத்துறை தொடர்பான பல்வேறு செயல்பாடுகளை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னக்கோன் மேலும் தெரிவித்தார்.

(அ)

# எமது அரசில் தேயிலை உற்பத்தி அதிகரிக்கும்!

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, மார்ச் 29

தமது அரசாங்கத்தின் கீழ் தேயிலை உற்பத்தி விவசாயிகளுக்கு உர மானியத்தை உரிய முறையில் வழங்கவுள்ளதாகவும் அதன்மூலம் தேயிலை உற்பத்தியை அதிகரிக்கவுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி லெல்லுப்பிட்டி ஸ்ரீ கல்யாண போதிராஜாராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மன்னன் சைதன்ய ஆலயத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் தேயிலை உற்பத்தி 35 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.



பாரிய தொழிலதிபர்களின் செல்வாக்கின் கீழ் இந்த ஆட்சி நடைபெறுகின்றது. ஊழல் மோசடிகள் மூலம் ஆயிரக்கணக்கான தலைமுறைகளாக அதிகளவான பணம் சம்பாதித்த குடும்பங்கள் நாட்டிலுள்ளன.

தோட்டத் தொழிலாளியை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளராக மாற்றுவதே எமது கட்சியின் பிரதான நோக்கம்.

தோட்டத்தொழிலாளர்களின் காணி உரிமையைக் கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை சுயசார்புடன் வழிநடத்தும் சிறிய தேயிலை தோட்ட சமூகம் உருவாக்கப்படும்.

நாட்டிற்கு டொலர்களை கொண்டு வரும் பெருந்தோட்ட சமூகம் இதுவரை தோட்டத் தொழிலா ளர்களாகவே காணப்படுகின்றனர்.

நாட்டிற்கு டொலர்களை கொண்டு வரும் மலையக மக்களே பிரதான பங்கு வகிக்கின்றனர். இன்றும் எமது நாடு ஓரளவுக்கு சுவாசிக்கின்றது என்றால் பெருந்தோட்டத் துறையில் தொழிலாளர் சமூகம் செய்த தியாகமே மிகப்பெரிய வரம்-என்றார்.

(அ)

# ரணில் களமிறங்கினால் நான் ஆதரவு வழங்குவேன்!

## சாமர சம்பத் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க களமிறங்கினால் நான் அவருக்கு ஆதரவு வழங்குவேன் என ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க களமிறங்கினால் நான் அவருக்கு ஆதரவு வழங்குவேன். இது எனது தனிப்பட்ட கருத்தாகும். ஏனையவர்களின் தீர்மானம் தொடர்பில் என்னால் எதையும் கூறமுடியாது.

உரிய நேரத்தில் தேர்தல் அறிவிப்பு வெளியாகும்.

எனவே ஏனையவர்களைப் போன்று மன்னதாகவே ஆடைகளை தைத்து பதவிபிரமானத்திற்கு தயாராகப்போவதில்லை



தேர்தலில் எமக்கு எவரும் சாவாலாக அமையப்போவதில்லை ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் கட்சி ரீதியாக நாம் தீர்மானம் எதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. ஆனால் நான் தனிப்பட்ட ரீதியில் ரணிலுக்கே ஆதரவு வழங்குவேன்-என்றார்.

(அ)

# மோசமான நிலையில் உள்ள படகுப் பாதை!

## போக்குவரத்தில் மக்கள் சிரமம்

மட்டக்களப்பு, மார்ச் 29

**மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அம்பிளாந்துறை கிராமத்தையும் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட குருக்கள்மடம் கிராமத்தையும் இணைக்கும் இயந்திரப் படகு பாதை சேதமடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

குறித்த இரு கிராமங்களையும் இணைக்கும் பிரதான போக்குவரத்து மார்க்கமாக இந்த இயந்திர படகுப் பாதை காணப்படுகின்றது.

அத்துடன், நாளாந்தம் இந்த பாதையின் ஊடாக நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பு மேலங்கிகள் அணியாமல் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பிரயாணம் செய்து வருவதாக கூறப்பட்டுள்ளது.

மேலும், பாதையின் தட்டி மற்றும் சங்கிலிகள் உக்கிய நிலையில் வெடித்து காணப்படுவதோடு அதை கட்டை ஒன்றில் கட்டியுள்ளனர்.

இந்நிலையில், விபத்து இடம்பெறாமல் இருக்க உரிய அதிகாரிகள் தமக்கான நிரந்தர பாலமொன்றை அமைத்துத் தருமாறு அம்பிளாந்துறை மற்றும் குருக்கள்மடம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)





# பொத்துவில் பிரதேச செயலகம் தேசிய ரீதியில் முதலாம் இடம்!

அம்பாறை, மார்ச் 29

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சிறுவர் ஓய்வூதிய திட்ட ஆட்சேர்ப்பின் மூலம், பொத்துவில் பிரதேச செயலகம் 2,559,300 ரூபாய் பணத்தை சேமிப்பு தொகையாக வைப்புச் செய்து தேசிய ரீதியில் முதல் நிலையினை பெற்றுக்கொண்டது.

இதனை பாராட்டி கௌரவித்து நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, பொத்துவில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிர்னாஸ் இஸ்மாயில் அவர்களுக்கு நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட அரசாங்க அதிபர் வழங்கி கௌரவித்தார்.

கடந்த வருடம் நாடளாவிய ரீதியிலுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சிறுவர் ஓய்வூதியத்திட்ட ஆட்சேர்ப்பின் மூலம், பொத்துவில் பிரதேச செயலகம் 648 இலக்கையும், 4152 பேரை இணைத்து 2,559,300 ரூபா சேமிப்பு பணத்தை வைப்புச் செய்து 640.74 சதவீதம் அடிப்படையில் செயற்பட்டு தேசிய ரீதியில் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# வேத்துச்சேனை கிராம மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்னைக்கு தீர்வு!



மட்டக்களப்பு, மார்ச் 29

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேத்துச்சேனைக்கிராம மக்கள் இதுவரை காலமும் தமக்குரிய சுத்தமான குடிதண்ணீரின்றி மிகவும் இன்னலுற்ற நிலையிலேயே தமது வாழ்வைக் கழித்து வந்தனர்.

இவ்விடயம் குறித்து அக்கிராம மக்கள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் கவனத்திற்குக் கொண்டு சென்றனர்.

மக்களின் கோரிக்கையை ஏற்று துரிதமாகச் செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் தொடர்பு கொண்டு வேத்துச்சேனைக் கிராம மக்களுக்குரிய குழாய்மூலமான சுத்தமான குடிதண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதற்கிணங்க நேற்று அக்கிராமத்திற்கு குடிதண்ணீர் வழங்குவதற்குரிய ஆரம்ப கட்ட வேலைத்திட்டங்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் பிரத்தியேக செயலாளர் விமலநாதன் மதிமேனன், இலங்கை தேசிய நீர்வழங்கல் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட நிர்மாண பொறியியல் உதவியாளர் இளைய தம்பி பிரதீபன், இலங்கை தமிழரசுக்கட்சி போரதீவுப்பற்று வட்டாரக்கிளை உபதலைவர் மகேஸ்வரன் கோபிநாத், பாலையடி வட்டை இணைப்பாளர் தங்கராசா ஜெயசீலன், போரதீவு வட்டார இணைப்பாளர் பெரிய தம்பி பிரதீப்குமார் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டனர். (அ)

# இன நல்லினக்கத்தை ஏற்படுத்தும் ரமழான்

## ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர் தெரிவிப்பு

அம்பாறை, மார்ச் 29

"இன நல்லினக்கத்தையும், சமத்துவத்தையும் வலியுறுத்தும் மார்க்கமாக இஸ்லாம் திகழ்கின்றது இந்த அடிப்படையில் மகத்துவமான ரமழான் மாதத்தில் நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வுகள் முன்னுதாரணமாக இடம்பெறுகின்றன"

-இவ்வாறு, ஹற்றன் நஷனல் வங்கியின் நிந்தவூர்க் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டு நேற்று முன் தினம் புதன் கிழமை நடைபெற்ற வருடாந்த இப்தார் நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் (கடன் அறவீடு) ஏ.எல்.சிராஜ் அகமட் கூறினார்.

ஹற்றன் நஷனல் வங்கியின் நிந்தவூக்கிளை முகாமையாளர் என்.நந்த கோபன் தலைமையில், நடைபெற்ற இந்த நிகழ்வில், பிராந்திய முகாமையாளர் (வியாபாரம்) எஸ்.சத்திய சீலன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



வங்கிக்கிளை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நல்லிணக்க இப்தார் நிகழ்வில், வங்கி வாடிக்கையாளர்கள், பிரதேச முக்கியஸ்த்தர்கள் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

பிராந்திய முகாமையாளர் சிராஜ் அகமட் தொடர்ந்து உரையாற்றுகையில்-

இலங்கையின் முன்னணி வங்கியான ஹற்றன் நெஷனல் வங்கி வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு திருப்திகரமான சேவைகளை தொடர்ச்சியாக ஆற்றிவருவதுடன், வாடிக்கையாளர்களின் திருப்திகரமான, நல்லபிப்பிராயத்தையும் கொண்டு மிளிர்ந்து வருகின்றது.

இதற்கு எடுத்துக்காட்டாகவும், இன, மத பேதங்களுக்குப்பால் தொடர்ந்துவரும் மக்கள் சேவையின் சிறப்பம்சமாகவும் இன்றைய நல்லிணக்க இப்தார் நிகழ்வு இடம்பெறுகின்றது.

இஸ்லாமிய வரலாற்றில் முக்கியத்துவமான இந்த புனித ரமழான் மாதம் புனித அல்-குர்ஆன் இறக்கப்பட்ட வரலாற்றுப் பெருமை மிக்க மாதமாகும்.

இதேபோன்று மேலும் சிறப்புமிக்க சம்பவங்களுக்கும் உரித்தான இந்த புனித ரமழானின் உம்ரா நிகழ்வை ஏற்பாடு செய்ததன் மூலம் இந்த வங்கிக் கிளை சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு வலுச்சேர்த்துள்ளது-என்றார். (அ-06)

# திருமலையில் சிவலிங்கம் வைக்க பௌத்த தேரர்கள் கடும் எதிர்ப்பு

திருமலை, மார்ச் 29

திருகோணமலையில் 1008 சிவலிங்கம் வைப்பதைத் தடுக்குமாறும், சிங்கள மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்காமல் இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை கோகன்னபுர காக்கும் அமைப்பினால் நேற்று முன் தினம் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பௌத்த பிக்கு ஒருவர் கருத்து தெரிவிக்கையில்-

திருகோணமலை மாவட்டத்தில் வாழ்ந்து வரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் சார்பாக குரல் எழுப்பும் விதத்தில் நாங்கள் செயல்பட்டு வருகின்றோம்.

மாவட்டத்தில் 1008 சிவலிங்கங்களை வைப்பதற்கு தீர்மானித்துள்ள நிலையில் சிங்கள மக்களின் காணிகளுக்குரிய உறுதி பத்திரங்கள் வழங்கப்படாமல் இருப்பதைக் கண்டித்தும் தொல்பொருளுக்குரிய இடங்களைச் சேதமாக்குவதை கண்டித்தும் எங்கள் எதிர்ப்பை மேற்கொண்டு வருகின்றோம்.

திருகோணமலையில் இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கு பலர் முயற்சித்து வருகின்றனர். அதற்கு இடம் அளிக்கமாட்டோம்-என்றார்.

# வான்வழி விநியோகங்களை நிறுத்த ஹமாஸ் கோரிக்கை

## அமெரிக்கா அதற்கு மறுப்பு

நியூயோர்க், மார்ச் 29

**காஸாவில் விமானங்களிலிருந்து பரசூட் மூலம் உதவிப்பொருட்களை விநியோகிப்பதை நிறுத்துமாறு ஹமாஸ் அமைப்பு கோரியுள்ளது. எனினும் இதற்கு அமெரிக்கா மறுப்பு தெரிவித்துள்ளது.**


**காஸாவில் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக விமானங்களிலிருந்து பரசூட் மூலம் உதவிப்பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா உட்பட பல நாடுகள் ஈடுபட்டுள்ளன.**

*இந்த உணவுப் பொதிகளை பெறுவதற்கான முயற்சிகளில் இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*இதனால் பரசூட் மூலம் பொதிகளை இறக்குவதை நிறுத்துமாறு ஹமாஸ் கோரியுள்ளது.*

*இதற்கு பதிலாக, தரை வழியாக அதிகளவு விநியோகங்களுக்கு இஸ்ரேல் அனுமதிக்க வேண்டுமெனவும் ஹமாஸ் கோரியுள்ளது.*

*எனினும், வான் வழியான விநியோகம் என்பது காஸாவிலுள்ள பலஸ்தீன மக்களுக்கு உதவிகளை விநியோகிப்பதற்காக அமெரிக்கா கையாளும் வழிகளில் ஒன்று எனவும்,*



*அதை அமெரிக்கா தொடரும் எனவும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு பேரவை தெரிவித்துள்ளது.*

*இதேவேளை, ஒக்ரோபர் 7 ஆம் திகதியின் பின்னர் காஸாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 32,490 ஆக அதிகரித்துள்ளது என காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*



# கத்திக்குத்தில் நான்கு பேர் கொலை!

## சந்தேகநபர் கைது

*நியூயோர்க், மார்ச் 29*

*அமெரிக்காவில் - ராக்போர்ட் இல்லினாய்ஸ் பகுதியில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் 4 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.*

*அத்துடன், இந்த சம்பவத்தில் 7 பேருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ராக்போர்ட் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

*உள்நாட்டு நேரத்தின்படி பகல் 1:14 மணிக்கு முன்னதாக இந்த சம்பவம் இடம்பெற்றதாக ராக்போர்ட் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

*தாக்குதல் நடத்திய பிரதான சந்தேகநபர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*எனினும், இந்த கொலைக்கான காரணம் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை எனவும் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். (அ)*

# கிழக்கு ஜேர்மனியில் பெரும் வாகன விபத்து

## மரண எண்ணிக்கை அதிகரிக்கும் என அச்சம்

*பேர்ளின், மார்ச் 29*

*கிழக்கு ஜேர்மனியின் லீப்ஜிக் நகரத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளதுடன், 20 பேர் காயமடைந்துள்ளனர்.*

*விபத்துக் குறித்து விபரித்த சாக்ஸனி மாநில பொலிஸார் விபத்தில் மேலும் மரணங்கள் அதிகரிக்கலாம் எனச் சுட்டிக் காட்டியுள்ளனர்.*

*பேர்லின் நகரையும் மூனிச் நகரையும் இணைக்கும் வீதியில் பஸ் வீதியை விட்டு விலகியதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.*

*இந்த நிலையில் மூனிச் செல்லும் வீதி மூடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*மீட்புப் பணிகளில் உலங்கு வானூர்தி மற்றும் நோயாளர் காவு வண்டி என்பன ஈடுபட்டு இருந்தன.*

*மேலும் விபத்திற்கான உண்மையான காரணம் எதுவென இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் அது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அவசர மீட்புப் பணியாளர்கள் விபத்து தொடர்பில் என்ன நடந்தது என ஆராய்ந்து வருகின்றனர்.*

*பேர்ளினிலிருந்து சூரிச் நோக்கிப் பயணித்த குறித்த பஸ்ஸில் சுமார் 53 பயணிகள் உட்பட இரண்டு சாரதிகள் பயணித்துள்ளனர்.*

*(அ)*



# ஜூலியன் அசாஞ்சேக்கு உலகம் மரண தண்டனை விதிக்கக்கூடாது

## அமெரிக்க அரசிடம் உத்தரவாதம் கோரும் பிரிட்டிஷ் நீதிமன்றம்

*லண்டன், மார்ச் 29*

*விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவுக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்று அமெரிக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா என பிரிட்டிஷ் உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது. இதுகுறித்து 3 வாரங்களுக்குள் பதில் அளிக்க நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் உத்தரவிட்டுள்ளார்.*

*அவுஸ்திரேலியாவை சேர்ந்த செய்தியாளர் ஜூலியன் அசாஞ்சே கடந்த 2006ஆம் ஆண்டில் விக்கிலீக்ஸ் என்ற இணையதளத்தை தொடங்கினார். கடந்த 2010இல் ஆப்கானிஸ்தான், ஈராக் போர் தொடர்பான ரகசிய ஆவணங்கள் இந்த இணையதளத்தில் வெளியாகின. இதில் அமெரிக்க ராணுவத்தின் பல்வேறு ரகசியங்கள் அம்பலப்படுத்தப்பட்டன.*

*இந்த சூழலில் பாலியல் வன்கொடுமை வழக்கில் ஜூலியன் அசாஞ்சேயை கைது செய்ய கடந்த 2010ஆம் ஆண்டு நவம்பரில் சுவீடன் நீதிமன்றம் வாரண்ட் பிறப்பித்தது. கைது நடவடிக்கையில் இருந்து தப்பிக்க கடந்த 2012ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் உள்ள ஈகுவடார் தூதரகத்தில் அவர் தஞ்சமடைந்தார்.*

*கடந்த 2019ஆம் ஆண்டில் அவருக்கு வழங்கப்பட்ட அடைக்கலத்தை ஈகுவடார் அரசு வாபஸ் பெற்றது. இதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பொலீஸார், ஜூலியன் அசாஞ்சேவை கைது செய்தனர். கடந்த 5 ஆண்டுகளாக தெற்கு லண்டனில் உள்ள சிறையில் அவர் அடைக்கப்பட்டு உள்ளார்.*




*அமெரிக்காவை உளவு பார்த்தது, ராணுவ ரகசியங்களை திருடியது உட்பட 17 குற்றச்சாட்டுகளை அசாஞ்சே மீது அந்த நாட்டு அரசு சுமத்தி உள்ளது. அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று அவரை நாடு கடத்த பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகம் கடந்த 2022ஆம் ஆண்டு ஜூனில் ஒப்புதல் அளித்தது.*

*இதுதொடர்பான வழக்கு லண்டனில் உள்ள உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் விசாரித்து நேற்று முக்கிய உத்தரவினைப் பிறப்பித்தார்.*

*“ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்று அந்த நாட்டு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அவரது கருத்து சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டும். அமெரிக்க குடிமகனுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு உரிமைகளை அஸ்திரேலியாவை சேர்ந்த அசாஞ்சேவுக்கும் வழங்க வேண்டும். அவர் மீதான வழக்கு விசாரணை நேர்மையாக நடைபெற வேண்டும். இவை குறித்து 3 வாரங்களுக்குள் அமெரிக்க அரசு பதில் அளிக்க வேண்டும்.*

*இல்லையென்றால் தொடர்ச்சியாக விசாரணை நடைபெறாது. அமெரிக்காவுக்கு நாடு கடத்தக் கோரும் வழக்கை எதிர்த்து மேல்முறையீடு செய்ய அசாஞ்சேவுக்கு அனுமதி வழங்கப்படும்” என்று நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் உத்தரவிட்டார். இவ்வழக்கின் அடுத்த விசாரணை மே 20க்கு ஒத்தி வைக்கப்பட்டது.*

*இதுகுறித்து ஜூலியன் அசாஞ்சேவின் மனைவி ஸ்டெல்லா கூறும்போது, “எனது கணவருக்கு தற்காலிக நிவாரணம் மட்டுமே கிடைத்திருக்கிறது. இந்த வழக்கை அமெரிக்க அரசு கைவிட வேண்டும். இதற்கான உத்தரவை அதிபர் பைடன் பிறப்பிக்க வேண்டும்” என்று தெரிவித்தார். பிரிட்டனின் பிரதான எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் முன்னாள் தலைவர் ஜெர்மி கார்பின் கூறும்போது, “அசாஞ்சே மீதான வழக்குகளை அமெரிக்க அரசு கைவிட வேண்டும்” என்று கோரினார். (அ)*

# இந்தியாவின் கைபொம்மையாக செயல்படுகின்றது ரணில் அரசு!

## வசந்த முதலிகே குற்றச்சாட்டு!

கொழும்பு, மார்ச் 29

**அரசாங்கம் இந்தியாவின் கைபொம்மையாகச் செயல்பட்டு வருவதாக, மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர் வசந்த முதலிகே குற்றம் சுமத்தியுள்ளார்.**

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர் நாடு இன்று பாரிய பொருளாதார பின்னடைவில் உள்ளது.

அரசாங்கத்திடம் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதற்கான எந்த திட்டங்களும் இல்லை.

வெளிநாடுகளில் கடன்பெற்று அதனூடாகவே நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுள்ளனர்.

இன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமையவே அனைத்து திட்டங்களும் நாட்டில் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கு ஆதரவான செல்வந்தர்களுக்கு மாத்திரமே சலுகைகளை அரசாங்கம் வழங்குகின்றது.

இவ்வாறான ஒரு நாட்டிலேயே பொருளாதார பிரச்சனை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக ஜனாதிபதியும், மத்திய வங்கியின் ஆளுநரும் தெரிவிக்கின்றனர்.

ஆனால் நாட்டு மக்கள் இன்று வறுமையில் அல்லற்படுகின்றனர்-என்றார். (அ)

# செவ்வாய்க்கிழமை முதல் மீளவும் பணிப்புறக்கணிப்பு

## சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணி முதல் பணிப்புறக்கணிப்பினை முன்னெடுக்க சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

பொருளாதார நீதியை அடைவதற்கு சுகாதார தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்று நிறைவடைந்துள்ளதுடன் மேலும் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக, தொடர்ச்சியாக போராடுவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள 35,000 ரூபாய் கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி 72 சுகாதார தொழிற்சங்கங்கள் கடந்த காலங்களில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மட்டுப்படுத்தப்பட்ட முட்டை இறக்குமதி

கொழும்பு, மார்ச் 29

இந்திய முட்டை இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தேவையான முட்டைகள் கையிருப்பிலுள்ளதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 5 மில்லியன் முட்டைகள் கையிருப்பிலுள்ளதாக அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் தலா 5 இலட்சம் முட்டைகள் சதொச விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் முட்டையின் விலை 43 ரூபாவாகும். (அ)

## சர்வதேச போதைப்பொருள் வர்த்தகர் கைது!

கொழும்பு, மார்ச் 29

சர்வதேச போதைப்பொருள் வர்த்தகரான கந்தசேன எனப்படும் கஹனவிடகே டொன் கந்தசேன பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியாவில் உள்ள விடுதியொன்றில் தமது மனைவியுடன் தலைமறைவாகியிருந்த நிலையிலேயே அவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், கிரிபத்கொடை மற்றும் கட்டுநாயக்க ஆகிய பகுதிகளில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கடந்த 2ஆம் திகதி பறிமுதல் செய்யப்பட்ட 15 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 10 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் குறித்த சந்தேகநபருடையது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# 3 வயது குழந்தை உயிரிழந்த சம்பவம் மேலதிக விசாரணைகள் சி.ஐ.டியிடம்!

கொழும்பு, மார்ச் 29

சிறுநீரக கோளாறு காரணமாக கொழும்பு ரிட்ஜ்வே சிறுவர் சீமாட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூன்று வயது குழந்தை உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

பொரளை பொலிஸார் நேற்று முன் தினம் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்ததன் பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழந்தையின் சத்திர சிகிச்சையை மேற்கொண்டதாகக் கூறப்படும் விசேட வைத்தியர் நவீன் விஜேகோன் தற்போது அவுஸ்திரேலியாவில் தங்கியிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

அவரது இருப்பிடம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன சம்பந்தப்பட்ட துறைகளால் காவல்துறையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவுக்கு பொறுப்பான விசேட வைத்தியர் உட்பட பல வைத்தியர்கள் நீதிமன்றில் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

அத்துடன், இந்த சம்பவம் தொடர்பான ஸ்கேன் பரிசோதனையை மேற்கொண்டதாக கூறப்படும் நுவான் ஹேரத் என்ற வைத்தியரும் தற்போது வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் மன்றுக்கு அறியப்படுத்தியுள்ளனர்.

வெளிநாட்டில் உள்ள இரண்டு வைத்தியர்களையும் இலங்கைக்கு வரவழைத்து சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும், மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறும் பொரளை காவல்துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு பகுதியைச் சேர்ந்த ஹம்தி பஸ்லின் என்ற குழந்தை சிறுநீரக நோயினால் உயிரிழந்துள்ளதுடன், அவரின் பெற்றோர் அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பொரளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். (அ)

# அரிசி,வெங்காயத்துக்கான விசேட பண்டவரி குறைப்பு!

கொழும்பு, மார்ச் 29

அரிசி மற்றும் வெங்காயத்துக்கான விசேட பண்டவரி குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இளஞ்சிவப்பு நிறத்திலான பெரிய வெங்காயத்திற்கு விதிக்கப்பட்டிருந்த வரி, 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக இளஞ்சிவப்பு நிறத்திலான பெரிய வெங்காயம் கிலோவொன்றுக்கான வரி 70 ரூபாவாக காணப்பட்டது.

தற்போது இந்தியாவும் பாகிஸ்தானும் பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளன.

இந்த நிலையில், இந்தியாவில் இருந்து இளஞ்சிவப்பு நிறத்திலான பெரிய வெங்காயத்தை மாத்திரமே இறக்குமதி செய்ய முடியும் என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ள பின்னணியில், இளஞ்சிவப்பு நிறத்திலான பெரிய வெங்காயத்திற்கு விதிக்கப்பட்டிருந்த பண்டவரியை குறைக்க நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த வரி மானியம் அடுத்த மாதம் 30 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் ஒருகிலோகிராம் அரிசிக்காக விதிக்கப்பட்டிருந்த 65 ரூபாய் என்ற விசேட பண்டவரி ஒரு ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதிக்குள் இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரத்தை பெற்ற எந்தவொரு அரிசி இறக்குமதியாளருக்கும் இந்த வரி திருத்தம் பொருந்தும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# பெருந்தோட்ட தொழிலாளர்கள் பிரச்சனைக்கு ஐ.நா ஊடாக தீர்வு!

கொழும்பு, மார்ச் 29

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன பிரச்னை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை தொகுதி அமைப்பாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 55ஆவது கூட்டத்தொடர் தற்போது இடம்பெற்று வருகின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன பிரச்னை இழுபறியாக உள்ள நிலையில், மலையக மக்களின் வேதன பிரச்னை, இளைஞர் யுவதிகளுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புகள், வேலைவாய்ப்பு பயிற்சிகள்,சுயத்தொழில் பற்றியும் ஐக்கிய நாடுகள் சபையில் அவர் உரையாற்றியுள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை தலைவர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் ஓரிரு மாதங்களில் குறித்த பிரச்சினைக்கு தீர்வு கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் இதன்போது உறுதியளிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை தொகுதி அமைப்பாளர் லெட்சுமனார் சஞ்சய் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# திடீர் சுகயீனமுற்ற தம்பதியினர் மரணம்!

கொழும்பு, மார்ச் 29

அகலவத்தை - வந்துரப பிரதேசத்தில் தம்பதியினர் திடீரென உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள் ளது.

வந்துரப பிரதேசத்தில் வசிக்கும் 59 வயதுடைய வன்னி ஆராச்சிகே உபாலி டயஸ் மற்றும் அவரது மனைவி சந்திரிகா அமரசிங்க ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடும் வாந்தி பேதியால் திடீர் சுகயீனமுற்ற நிலையில் கணவன், மனைவி தொடர்ச்சியாக அவதியுற்று வந்த நிலையில், கணவன் வீட்டிலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, களுத்துறை - நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் , அவரது மனைவியும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## இராணுவத்தின்...

தொடர்ந்தே தொழிற்சாலையை புனரமைக்கும் பணிகளில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

“நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும் உள்நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் அந்தப் பகுதி மக்களின் நலனை மேம்படுத்தவும் இந்த தொழிற்சாலை புதுப்பிக்கப்படுகிறது”, என்று இராணுவம் தெரிவித்துள்ளது. (ஐ)

## நாட்டின்...

நாட்டை விட்டு வெளியேறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்துடன், பிறப்பு வீதமும் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த காரணிகளால் நாட்டின் மொத்த சனத்தொகை எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (ஐ)

## வலி.வடக்கில்...

தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கடந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் புதிய பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் காணப்படும் 21 வழிபாட்டுத் தலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 7 ஆலயங்கள் வழிபாடுகளுக்காக விடுவிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் கூறினார்.

கட்டுவன், வயாவிளான், பலாலி ஆகிய பகுதிகளில் காணப்படும் ஆலயங்களே வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்படவுள்ளன.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாக எவ்வித வழிபாடுகளையும் நிகழ்த்தாத குறித்த ஆலயங்களுக்கு முதலில் மக்கள் செல்ல வேண்டும் எனவும், இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் இராணுவத்துடன் கலந்துரையாடவுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

மக்கள் அங்கு செல்லும் போது ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும் என இதன் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருடன் கலந்துரையாடி பரிசீலிக்கப்படும் என மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவர்கள் கூறினார்கள்.

இதேவேளை, 1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்குமாறு துறைசார் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகும், எதிர் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் விவசாய நவீன மயமாக்கல் செயற்பாடு தொடர்பில் மாகாண சபைக்கு அறிவிக்க வேண்டும் என குறித்த செயற்திட்டத்தின் பிரதி பணிப்பாளருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் விதை உருளைக் கிழங்கில் பற்றீரியா தொற்று ஏற்பட்டமை தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன் யுக்திய விசேட சுற்றிவளைப்பின் ஊடாக கைது செய்யப்படும் நபர்களுக்கான புனர்வாழ்வு செயற்பாடுகளை மாத்திரம் மேற்கொள்ளாது, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் முழு வலையமைப்பையும் கண்டுபிடிக்க வேண்டும் என பொலிஸாருக்கு ஆளுநர் கூறினார். (ஐ)

## நெருக்கடிகளுக்கு...

நாடு கடும் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சூழலில் உயிர்த்த ஞாயிறு கொண்டாடப்படுகின்றது. மக்களின் துயரங்களை குறைப்பதற்கு நாட்டின் ஆட்சி முறையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பாடுபடவேண்டியது அனைத்து பிரஜைகளினதும் கடமை.

நாடு முன்னர் ஒருபோதும் இல்லாளவுக்கு நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சூழலில் நாங்கள் உயிர்த்த ஞாயிறு தினத்தை கொண்டாடுகின் றோம். உயிர்த்த ஞாயிறு என்பது கத்தோலிக்க நம்பிக்கையின் புனிதமான மர்மம் மற்றும் உச்சக்கட்டம் இந்த நேரத்தில் நாங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியை சமாளிப்பதற்கு இறைவனை வேண்டுவோம்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று படுகொலைகள் இடம்பெற்று ஐந்து வருடங்களாகின்றன. இதன்போது 275 பேர் கொல்லப்பட்டனர். பலர் நிரந்தர நோயாளிகளாக மாறினர். துயரத்தில் சிக்குண்டுள்ளவர்களின் வலிகளுக்கு தீர்வை காண்பதற்காக நீதி வழங்குமாறு அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ஐ)

## இலங்கையர்...

மாவட்டமாக மொனராகலை மாவட்டம் பதிவாகியுள்ளது.

மொனராகலை மாவட்டத்தில் தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு, ஒருவருக்கு மாதாந்தம் 16,268 ரூபாய் தேவைப்படுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நான்கு பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு தங்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மாதாந்தம் 68,560 ரூபாய் தேவைப்படுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## கேப்பாப்பிலவு...

பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

கேப்பாபிலவில் படைகளின் வசமுள்ள 59.5 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் நேற்று முன் தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இராணுவ தளபதியின் முல்லைத்தீவு வருகையை முன்னிட்டு கேப்பாபிலவு படை முகாம் முன்பாக அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு இராணுவ தளபதியை சந்தித்துப் பேச ஏற்பாடு செய்து தருவதாகக் கூறி போராட் டத்தை நிறுத்தச் செய்தனர் அங்கிருந்த இராணுவத்தினர்.

பின்னர், காலை தொடக்கம் அங்கு காத்திருந்த மக்களில் ஐவரை மாலை 5 மணிக்கு முகாமுக்குள் அனுமதித்தனர். ஆனால், அங்கு இராணுவத் தளபதி இருக்கவில்லை. வன்னி மாவட்ட உயர் அதிகாரி ஒருவரே இருந்தார்.

அவர் போராட்டக்காரர்களின் பிரதநி திகளிடம் “கேப்பாபுலவு இராணுவ முகாம் அகற்றப்படாது. மக்களின் காணிகள் எவ்வளவு உள்ளதோ அதற்கு இணையாக வேறிடத்தில் காணியும் வீடும் தருவதாகக் கூறினார். அரசாங்கம் நிறைய பணத்தை செலவு செய்து முகாமை அமைத்துள்ளது என்றும் கூறினார்.

இரவு 7.45 மணி வரை தொடர்ந்த இந்த சந்திப்பில், போராட்டக்காரர்களின் பிரதிநிதிகள் தமக்கு தங்களின் காணிக ளையே தர வேண்டும்”, என்று வலியுறுத் தினர்.

அவர்களின் இந்தக் கோரிக்கைக்கு பதிலளிக்க அவகாசம் தருமாறு கோரி விட்டு சந்திப்பை நிறைவு செய்து அங்கிருந்து அவர் சென்று விட்டார் என்றும் அறிய வருகிறது. (ஐ)

# சீனாவின் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் ஜூனில் பணியை தொடங்கும்

### எரிசக்தி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

உலகின் மிகப்பெரிய மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமான சீனாவின் சினோபெக் நிறுவனம் ஜூன் மாதத்துக்குள் இலங்கையில் தனது நிலையத்தை தொடங்கத் திட்டமிட்டுள்ளது என்று காஞ்சனா விஜயசேகர நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

சினோபெக் ஓவர்சீஸ் இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்கின் அதிகாரிகள், இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதற்காக கொழும்பு வந்துள்ளனர்.

“சினோபெக் நிர்வாகம் சுத்திகரிப்பு நிலையத்தின் திறனை இரட்டிப்பாக்க முடிவு செய்துள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்” என்று அமைச்சர் தெரிவித்தார்.

சினொபெக் நிறுவனம் திட்ட ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு ஜூன் மாதத்துக்குள் வேலையைத் தொடங்கவுள்ளனர். 450 கோடி டொலர்கள் முதலீட்டில் உருவாகும் இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (ஐ)

# படைகள் விடுவித்த காணிகளில் விவசாயம் செய்ய நடவடிக்கை

### முன்னாயத்த கலந்துரையாடல் நடந்தது



யாழ்ப்பாணம், மார்ச் 29

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்தவாரம் வலி. வடக்கில் படையினர் வசமிருந்த காணி நிலங்கள் உரிமையாளர்களிடம் கையளித்தார். இதையடுத்து குறித்த காணி நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைளை உரிமையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும் மக்களுக்கு அவற்றை முன்னெடுப்பதற்கான ஏதுநிலைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

விடுவிக்கப்பட்ட காணி நிலங்களின் உரிமையாளர்கள் மற்றும் பிரதேச மக்களை அழைத்து அவர்களின் எண்ணப்பாடுகளை அறிந்துகொள்ளும் முகமாக ஒட்டகப்புல அமலஉற்பவ தேவாலயத்தில் இந்தக் கலந்துரையாடல் நடந்தது.

முன்னதாக வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேசத்தில் சுமார் 30 வருடங்களாக உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த 234.83 ஏக்கர் காணி நிலங்களை கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடுவித்தார்.

இதன் போது மக்கள் தங்களுடைய ஏனைய காணிகளும் அத்துடன், உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மானம்பிராய் பிள்ளையார் ஆலய வழிபாடுகளுக்கும் இராணுவத்தினர் வெள்ளிக்கிழமைகளில் அனுமதிக்கப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர் .

ஏணைய காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும், மக்கள் மீளக்கூடிய ஏதுவான வசதிகள் செய்யப்பட வேண்டும் , உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தர வேண்டும், அச்சுவேலி தெல்லிப்பழை பிரதான வீதி திறக்கப்பட வேண்டும், போன்ற கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சாதகமான பதிலை வழங்கி விரைவில் சாத்தியமாகும் என தெரிவித்தார். (ஐ)

## மைத்திரியை...

ஞாயிறு தாக்குலின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்று தமக்கு தெரியும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கண்டியில் வைத்துக் கூறியிருந்தார்.

இது தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காகவே எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மைத்திரிபால சிறிசேனவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன குற்றப் புலனாய்வு பிரிவில் கடந்த திங்கட் கிழமை அளித்த வாக்குமூலம் சட்டமா அதிபரின் பணிப்பில் நீதிமன்றத்தில் நேற்று அறிக்கையிடப்பட்டது. இதைத் தொடர்ந்தே மாளிகாகந்தை நீதிவான் மேற்படி உத்தரவை பிறப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உக்ரைன்...

வருமாறு,

“இராணுவத்தில் கட மையாற்றிவரும் எவரும் ரஷ்யா - உக்ரைன் போர் முனைகளில் இல்லை. அவ்வாறு யாரும் செல்லவும் முடியாது. படையில் இருக்கும் ஒருவர் வெளிநாடு செல்ல வேண்டுமாக இருந்தால் அதற்கான உரிய நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். எவ்வாறாயினும், படையில் இருந்து விலகிய பலர் ரஷ்ய மற்றும் உக்ரைன் போர் களத்தில் இணைந்து செயல்படுகின்றனர்.

படையில் இருந்து விலகியவர்கள் அவ்வாறு வெளிநாட்டு படைகளில் இணைவதை கட்டுப்படுத்த முடியாது. இதனிடையே இலங்கையில் இருந்து எவரும் ரஷ்யாவுக்கு நேரடியாக சென்று அங்குள்ள படைகளில் இணைந்து கொள்ளவில்லை. வெளிநாடுகளில் இருந்து ரஷ்யாவுக்குச் சென்ற முன்னாள் இராணுவத்தினரே அங்குள்ள படைகளில் இணைந்துள்ளனர்.

அண்மையில், போரில் கொல்லப்பட்ட இருவரும் டுபாயில் இருந்து ரஷ்யா சென்ற முன்னாள் இராணுவத்தினர் - என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக வழக்கு தாக்கல்!

கொழும்பு, மார்ச் 29

2012ஆம் ஆண்டு கிரேக்க அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட திறைசேரி பத்திரங்களை கொள்வனவு செய்து அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தினார் என்று கூறி முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட 5 பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜிவ சேனசிங்கவால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகளை அடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிறீஸ் கடும் பொருளாதார நெருக்கடியில் இருப்பதை அறிந்து அந்த நாட்டு அரசாங்கம் வழங்கிய திறைசேரி பத்திரங்களை கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்திற்கு 184 கோடியே 32 இலட்சத்து 67 ஆயிரத்து 595 ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக இது தொடர்பான முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட ஐவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலை செயல்பாடுகள் நேற்று முதல் வழமைக்கு




அம்பாறை, மார்ச் 29

கடந்த 11 ஆம் திகதி முதல் மூடப்பட்டிருந்த திருக்கோவில் வைத்தியசாலையின் செயற்பாடுகள் நேற்று முதல் வழமை போன்று முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி அம்பாறை - திருக்கோவிலிலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பங்கேற்ற மாணவன் சுகவீனமடைந்த நிலையில், திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், மேலதிக சிகிச்சைகளுக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த மாணவன் உயிரிழந்தார்.

திருக்கோவில் ஆதார வைத்தியசாலையை அண்மித்து இடம்பெற்ற எதிர்ப்பை அடுத்து வைத்தியசாலை மூடப்பட்டது.

வைத்தியசாலைக்கு சேதம் விளைவித்தவர்களும் வைத்தியருக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்களும் கைது செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கல்முனை சுகாதார பிரிவிற்குட்பட்ட பகுதியில் பணிப் பகிஷ்கரிப்பு நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்ற போது, திருக்கோவில் ஆதார வைத்தியசாலையை மீள திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பிலான முக்கிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். (அ)

# வீடற்ற மக்களுக்காக வடக்கில் 50,000 வீடுகள்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடக்கு மாகாணத்தில் வீடற்ற மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வகையில் சுமார் 50,000 வீடுகளை அமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

சூரிய கலன்களின் மூலம் மின் உற்பத்தியை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறித்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் சுமார் 45 இலட்சம் ரூபா பெறுமதியான 750 சதுர அடி விஸ்தீரணமுள்ள கல் வீடுகள் பயனாளர்களுக்கு கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சரும், ஒருங்கிணைப்பு குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று நடைபெற்றது.

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் பிரசன்னத்துடன், யாழ்ப்பாண மாவட்ட பதில் அரச அதிபர் பிரதீபனின் ஒழுங்குபடுத்தலில், ஆரம்பமான மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் நடப்பு ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக, மாவட்டத்துக்கு ஒதுக்கப்படும் நிதி, அதனூடாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது.

அத்துடன், துறை ரீதியான முன்னேற்ற மீளாய்வில் சேவைத் துறை சார்ந்த முன்னேற்றங்கள், அவற்றின் தீர்வுகள் குறித்தும் ஆராயப்பட்டது. (அ)

# ஓ.எல். பரீட்சையின் பின் விடுமுறை இனி இல்லை!

## உடனடியாக ஏ.எல். வகுப்பு ஆரம்பம் கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்ததும் உடனடியாகவே, மாணவர்களுக்கு உயர்கல்வி வகுப்பை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டமிடப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியதன் பின்னர் பெறுபேறுகள் வரும் வரையான நான்கு மாத காலப்பகுதியில் அந்த மாணவர்கள் வேறு விடயங்களுக்கு உட்படுகின்றனர். புதிய வேலைத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

க.பொ.த. சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்கு முன்பதாக க.பொ.த. உயர் கல்விக்கான வகுப்புகளை ஆரம்பிப்பதன் மூலம் பாடசாலைகளில் உயர் கல்விக்காக தோற்றும் 02 மாணவக் குழுக்கள் ஒன்றாக இணைக்கப்படுவர்.

இது எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்தாது. அதற்கான இட முகாமைத்துவமும் அதிபர்களினால் ஒழுங்கு செய்யப்படும்.

கல்வி முன்னேற்றம் மற்றும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதற்காக தேவையான மாற்றங்களும் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

க.பொ.த. உயர்தர விஞ்ஞான பாடத்துக்காக முதலில் 2001 ஆம் ஆண்டில் ஆங்கில மொழிக் கல்வியை அறிமுகப்படுத்தியதுடன், அது தற்போது 06ஆம் வகுப்பு முதல் க.பொ.த. உயர்தரம் வரை 500 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன்போது ஆங்கில பாடம் கற்பித்து அண்மைக்காலங்களில் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள ஆசிரியர்களை, மேலும் 03 வருட காலங்களுக்கு தற்காலிகமாக ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்கு இதன்போது ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

அந்த காலகட்டத்தில் தற்போது பாடசாலைகளில் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் அதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (அ)

# வெடுக்குநாறிமலை விவகாரம் ஐ. நா. பணிமனையில் முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 29

வெடுக்குநாறிமலையில் நீதிமன்ற உத்தரவைமீறி சைவ சமய வழிபாடுகளை நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு பணிமனை மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை செய்துள்ளது.

கடந்த சிவராத்திரி தினத்தில் நீதிமன்ற உத்தரவைமீறி சைவ சமய வழிபாடுகள் நடத்தப்பட்டதற்கான ஆதாரம் பொலிஸாரிடம் இல்லாமையால் வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தமையால் விடுதலையான தமிழ் இளைஞர்களே இந்த முறைப்பாட்டை வழங்கினர்.

தவறு செய்த பொலிஸ் அதிகாரிகளை குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரும், தங்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் அவமானங்களுக்கு இழப்பீடு வழங்குமாறும் தமது முறைப்பாட்டில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முறைப்பாடு செய்தவர்களின் குழுவில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் இருந்தார். (ஐ)

# பாதாள உலகக் குழுவை சேர்ந்த 10 பேர் கைதாகினர்!

கொழும்பு, மார்ச் 29

பாதாள உலகக் குழுவை சேர்ந்த 10 பேரை நேற்று நள்ளிரவு 12.30 மணி வரையான 24 மணி நேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுக்களின் செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட விசேட குழுவாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த 20 விசேட குழுக்களால் பதிவு செய்யப்பட்ட 446 பாதாள உலகக் குழுவை சேர்ந்தவர்களில் இதுவரை 80 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 80 சந்தேக நபர்களில் 53 சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)

# பணவீக்கம் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 29

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் மார்ச் மாதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கடந்த பெப்ரவரி மாதத்தில் 5.9 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் மார்ச் மாதத்தில் 5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# ஐ. பி. எல். தொடரில் சென்னை முதலிடம்

சென்னை, மார்ச் 29

ஐ. பி. எல். தொடரில் புள்ளிப் பட்டியலில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலிடத்தில் உள்ளது.

17ஆவது ஐ. பி. எல். தொடர் தற்போது நடந்து வருகின்றது. புள்ளிப் பட்டியலின் விவரம் வருமாறு,

1. சென்னை சுப்பர் கிங்ஸ் - 4 புள்ளிகள் - 1.979 ரன்ரேட்
2. ராஜஸ்தான் றோயல்ஸ் - 2 புள்ளிகள் - 1.000 ரன்ரேட்
3. சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - 2 புள்ளிகள் - 0.675 ரன்ரேட்
4. கொல்கத்தா நைற் ரைடர்ஸ் - 2 புள்ளிகள் - 0.200 ரன்ரேட்
5. பஞ்சாப் கிங்ஸ் - 2 புள்ளிகள் - 0.025 ரன்ரேட்
6. றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - 2 புள்ளிகள் - -0.180 ரன்ரேட்
7. குஜராத் ரைட்டன்ஸ் - 2 புள்ளிகள் - -1.425 ரன்ரேட்
8. டில்லி கப்பிடல்ஸ் - 0 புள்ளிகள் - -0.455 ரன்ரேட்
9.மும்பை இந்தியன்ஸ் -0 புள்ளிகள் - -0.925 ரன்ரேட்
10. லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் - 0 புள்ளிகள் - -1.000 ரன்ரேட்.

# இந்தியா - பாகிஸ்தான் டெஸ்ட் தொடரை நடத்த ஆஸி. ஆர்வம்!




மெல்பர்ன், மார்ச் 29

இந்தியாவும் பாகிஸ்தானும் இரு தரப்பு தொடரை 2012 - 13இற்குப் பிறகு விளையாடவில்லை. இரு அணிகளும் ஐ. சி. சி. தொடர்களில் மட்டுமே சந்திக்கின்றன. இந்நிலையில் இந்தியா - பாகிஸ்தான் டெஸ்ட் தொடரை நடத்த கிரிக்கெட் அவுஸ்திரேலியா விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு நவம்பர் மாதம், இந்திய பாகிஸ்தான் அணிகள் அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்கின்றன. பாகிஸ்தான் அணி 3 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 3 இருபது - 20 போட்டிகளில் பங்கேற்கிறது. இந்திய அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடுகின்றது. பெர்த்தில் முதல் டெஸ்ட் நடைபெறுகிறது.

இந்நிலையில் இரு அணிகளும் அங்கு இருப்பதால் மெல்பர்ன் கிரிக்கெட் கழகம் மற்றும் விக்ரோறியா அரசு இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது. 2022 இருபது - 20 உலகக் கிண்ணத்தில் இந்தியா - பாகிஸ்தான் ஆட்டத்தை சுமார் ஒரு இலட்சம் பேர் நேரடியாகப் பார்த்ததையடுத்து கிரிக்கெட் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரையும் நடத்த ஆர்வம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கிரிக்கெட் அவுஸ்திரேலியா தலைவர் நிக் ஹாக்லி கூறும்போது, “மெல்பர்னில் இந்தியா - பாகிஸ்தான் போட்டியைப் பார்த்தவர்கள் அனைவரும் அந்தப் போட்டியை ஒரு நினைவுகொள்ளக்கூடிய போட்டியாக மறக்க முடியாத தருணமாகவே கருதுகின்றனர். வெறும் விளையாட்டு மட்டுமல்ல அது. எனவே மக்கள் இந்தியா - பாகிஸ்தான் போட்டிகளைப் பார்க்க விரும்புகின்றனர். எனவே, வாய்ப்புக் கொடுத்தால் நிச்சயம் போட்டிகளை நாங்கள் நடத்தத் தயார். அப்படி நடத்துவதை மிகவும் நேசிக்கின்றோம். இந்தியா - பாகிஸ்தான் போட்டிகளை நடத்துவதில் உற்சாகமாக இருக்கிறோம். இதற்கு எங்களால் உதவ முடிந்தால் அது பெரிய விஷயம்.” என்றார். (ஐ)

# ஹைதரபாத் இமாலய இலக்கு; போராடி தோற்றது மும்பை!

ஹைதராபாத், மார்ச் 29

ஐ. பி. எல். வரலாற்றில் 278 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை மும்பை அணிக்கு நிர்ணயித்து 31 ஓட்டங்களால் அந்த அணியை வெற்றி கொண்டது ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணி.

இதேநேரம், ட்ராவிஸ் ஹெட், அபிஷேக் சர்மா, கிளாசன், மார்க்ரம் போன்றவர்கள் ஹைதராபாத் அணிக்காக அபாரமாக ஆடி ஓட்டங்களை குவித்தனர். அந்த அணியின் தலைவர் கம்மின்ஸ் 2 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 8ஆவது லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின. ஹைதராபாத் நகரில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் இந்த போட்டி நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ஹார்திக் பாண்ட்யா களத்தடுப்பைத் தெரிவு செய்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 277 ஓட்டங்கள் எடுத்தது.

அதையடுத்து துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 278 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டியது. இஷான் கிஷன் 13 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ரோகித் சர்மா 12 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். பின்னர் நமன் திர், திலக் வர்மா இணைந்து 84 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம்அமைத்தனர். நமன் 30 ஓட்டங்களிலும், திலக் 64 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

திலக் வர்மாவின் விக்கெட்டை கம்மின்ஸ் கைப்பற்றி இருந்தார். அது ஆட்டத்தில் ஹைதராபாத் அணிக்கு திருப்புமுனை கொடுத்த தருணமாக அமைந்தது. அப்போது 14.1 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 182 ஓட்டங்களை மும்பை அணி எடுத்திருந்தது.

அதன் பிறகு மும்பை ஓட்டங்களை சேர்க்க தடுமாறியது. அணித்தலைவர் ஹர்திக் 24 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். ரிம் டேவிட் 22 பந்துகளில் 42 ஓட்டங்கள் எடுத்திருந்தார். ரொமாரியோ ஷெப்பர்ட், 6 பந்துகளில் 15 ஓட்டங்கள் எடுத்தார். 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 246 ஓட்டங்கள் எடுத்தது மும்பை.

இதன் மூலம் ஹைதராபாத் அணி வெற்றி பெற்றது. மும்பை அணி இந்தத் தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் தோல்வியை தழுவியுள்ளது.

முன்னதாக, ஹைதராபாத் துடுப்பெடுத்தாடியபோது அந்த அணிக்காக மயங்க் அகர்வால் - ட்ராவிஸ் ஹெட் இணை தொடக்கம் கொடுத்தது. தொடக்கத்திலேயே அதிரடி இந்த இணையை 5ஆவது ஓவரில் ஹார்திக் பாண்ட்யா பிரித்தார். மயங்க் அகர்வால் 11 ஓட்டங்




களில் ஆட்டமிழ்ந்தார்.

அடுத்து வந்த அபிஷேக் சர்மா, ஹெட்டுடன் கைகோத்தார். 18 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் ட்ராவிஸ் ஹெட். அதிரடியாக ஆடிக்கொண்டி ருந்த வரை ஜெரால்ட் கோட்ஸி விக்கெட்டாக்க 24 பந்துகளில் 62 ஓட்டங்களை குவித்துவிட்டுச் சென்றார் ஹெட்.

அவர் சென்றதும் அணியின் ஸ்கோரை உயர்த்தும் பொறுப்பை ஏற்ற அபிஷேக் சர்மா 7 சிக்ஸர்கள் அடித்து வாணவேடிக்கை காட்டினார். மேலும், 16 பந்துகளில் 50 ஓட்டங்களை குவித்தார். அதன் மூலம் ஹைதராபாத் சார்பில் அதிவேக அரைச்சதம் விளாசிய வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார் அபிஷேக் சர்மா. மும்பை திணறிக்கொண்டிருந்தது.

ஒருவழியாக பியூஷ் சாவ்லா வீசிய 11ஆவது ஓவரில் பிடிகொடுத்து 63 ஓட்டங்களுடன் வெளியேறினார் அபிஷேக் சர்மா. மும்பைக்கு அவரின் விக்கெட் பெரும் நிம்மதியாக இருந்தது.

அடுத்து அய்டன் மார்க்ரம் - ஹென்ரிச் கிளாசன் இணைப்பாட்டம் அமைத்தனர். எல்லா துடுப்பாட்ட வீரர்களும் அடித்தால் என்னதான் செய்வது என்ற ரீதியில் மும்பை திணறிக்கொண்டிருக்க ஹென்ரிச் கிளாசன் மட்டும் 7 சிக்ஸர்ஸ். 18 ஓவர் முடிவில் ஹைதராபாத் 3 விக்கெட்கள் இழப்புக்கு 243 ஓட்டங்களை சேர்த்தது.

ஹென்ரிச் கிளாசன் 34 பந்துகளில் 80 ஓட்டங்களை விளாசி மிரள வைக்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்த ஹைதராபாத் 277 ஓட்டங்களை குவித்தது.

ஐ. பி. எல். வரலாற்றிலேயே அதிகபட்ச ஓட்டம் இதுதான். முன்னதாக கடந்த 2013ஆம் ஆண்டு புனே வாரியர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு 263 ஓட்டங்களை எடுத்திருந்ததே ஐ. பி. எல். தொடரின் அதிகபட்ச ஓட்டமாக இருந்தது. இந்நிலையில், அதனை முறியடித்து புதிய சாதனையை படைத்தது ஹைதராபாத். (ஐ)




# ராஜித விலகல்

டாக்கா, மார்ச் 29

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கசூன் ராஜித விலகியுள்ளார்.

இலங்கை அணி பங்களாதேஷுக்கு சென்று விளையாடி வருகிறது. இருபது - 20 தொடரை இலங்கையும் ஒருநாள் தொடரை பங்களாதேஷும் வென்றுள்ளன. முதல் டெஸ்ட் போட்டியில் வென்று டெஸ்ட் தொடரில் முன்னிலை வகிக்கிறது இலங்கை அணி.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகிறது. இந்நிலையில், இந்த போட்டிக்கான இலங்கை அணியில் இடம் பெற்றிருந்த முக்கிய வேகப்பந்து வீச்சாளரான கசூன் ராஜித விலகியுள்ளார்.

காயம் காரணமாகவே அவர் விலகியுள்ளார். இது இலங்கை அணிக்கு பின்னடைவாக கருதப்படுகிறது. ஏனெனில், அவர் முதலாவது டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட்கள் கைப்பற்றி அணியின் வெற்றியில் முக்கிய பங்காற்றினார். அவருக்கு பதிலாக அசித பெர்னண்டோ அணியில் இடம்பெற்றுள்ளார். (ஐ)

# டானியல் மெத்வதேவ் 350ஆவது வெற்றி!

மியாமி, மார்ச் 29

சர்வதேச ரென்னிஸில் 350ஆவது வெற்றியை பதிவு செய்தார் டானியல் மெத்வதேவ்.

மியாமி ஒப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் நடப்பு சம்பியனும், தரவரிசையில் 4ஆவது இடம் வகிப்பவருமான டானியல் மெத்வதேவ் (ரஷ்யா) 7-6 (7-5), 6-0 என்ற நேர் செற்றில் டொமினிக் கோப்பெரை (ஜேர்மனி) தோற்கடித்தார்.

இதன் மூலம் சர்வதேச போட்டியில் 350ஆவது வெற்றியை ருசித்த டானியல் மெத்வதேவ் தொடர்ந்து 4ஆவது முறையாக இந்த தொடரின் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். (ஐ)



ஈழநாடு



# காஸா போர் நிறுத்தம்:

## ஐ.நா. தீர்மானத்தை தடுக்காத அமெரிக்கா மீது இஸ்ரேல் கோபம்!

காசாவில் "உடனடியாக போர் நிறுத்தத்தை" அமல்படுத்துவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில். இதில் அமெரிக்கா தனது முந்தைய நிலைப்பாட்டில் இருந்து மாறி இந்தமுறை நடவடிக்கையை வீட்டோ செய்யாமல் தவிர்த்து விட்டது.

இந்த தீர்மானத்தின் படி அனைத்து பணயக்கைதிகளையும் உடனடியாக மற்றும் நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே அக்டோபரில் போர் தொடங்கியதில் இருந்து போர் நிறுத்த தீர்மானத்தை கொண்டு வர முடியாமல் ஐநா பாதுகாப்பு





கவுன்சிலுக்கு சில முட்டுக்கட்டைகள் இருந்தன.

இந்நிலையில் தற்போது அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடர்பாக, அதற்கும் அதன் நட்பு நாடான இஸ்ரேலுக்கும் இடையே வளர்ந்து வரும் கருத்து வேறுபாட்டைக் குறிப்பதாக அமைந்துள்ளது.

இந்த தீர்மானத்தின் மீது ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் 15 உறுப்பினர்களில் அமெரிக்கா தவிர மற்ற நாடுகள் வாக்களிக்க, அமெரிக்கா மட்டும் வாக்களிக்காமல் ஒதுங்கி நின்றது.

இதற்கு முன்னதாக இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில், போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் தீர்மானங்களை ஆதரிக்க முடியாது என்று முன்னர் அவற்றை தடுத்தது அமெரிக்கா.

ஆனால் வியாழனன்று, போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் தனது சொந்த வரைவு அறிக்கை ஒன்றை முதல் முறையாக முன்வைத்தது அமெரிக்கா. இது இஸ்ரேல் மீதான அதன் நிலைப்பாடு கடுமையாகியுள்ளதை குறிப்பதாக அமைந்தது.

**புறக்கணித்தது ஏன்? அமெரிக்க தூதர் விளக்கம்**

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் காசா தீர்மானத்தை அமெரிக்கா ஏன் புறக்கணித்தது என்பது குறித்து ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதர் லிண்டா தாமஸ்-கிரீன்ஃபீல்ட் விளக்கம் அளித்துள்ளார்.




ரஷ்யா மற்றும் சீனாவால் தடுக்கப்பட்ட முந்தைய அமெரிக்க தீர்மானத்தை அவர் முதலில் குறிப்பிட்டார், "அக்டோபர் 7-ம் தேதி ஹமாஸ் நடத்திய பயங்கரவாதத் தாக்குதல்களைக் கண்டிக்க அவர்களால் இன்னும் முடியவில்லை". என்று அவர் கூறினார்.

"இராஜதந்திர முயற்சிகள் மூலம் நீடித்த அமைதியை முன்னெடுப்பதில் அவர்கள் உண்மையில் ஆர்வம் காட்டவில்லை என்பதை அவர்கள் மீண்டும் மீண்டும் காட்டியுள்ளனர்," என்று லிண்டா தாமஸ்-கிரீன்ஃபீல்ட் கூறினார்.

இந்த புதிய தீர்மானத்தில், "முக்கிய திருத்தங்கள்" புறக்கணிக்கப்பட்டதாக தாமஸ்-கிரீன்ஃபீல்ட் தெரிவித்தார். குறிப்பாக ஹமாஸின் கண்டனம் தெரிவிக்கப்படாதது குறித்து அவர் ஏமாற்றம் தெரிவித்தார்.

"தீர்மானத்தில் உள்ள அனைத்தையும் நாங்கள் ஏற்கவில்லை," என்று அவர் கூறினார். "அந்த காரணத்திற்காக, எங்களால் துரதிருஷ்டவசமாக ஆம் என்று வாக்களிக்க முடியவில்லை."என்றார் அவர்.

அவர் மேலும் கூறுகையில் "இருப்பினும், நான் முன்பு கூறியது போல், இந்த கட்டுப்பாடற்ற தீர்மானத்தில் சில முக்கியமான நோக்கங்களை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். அனைத்து பணயக்கைதிகளின் விடுதலையுடன் எந்தவொரு போர் நிறுத்தமும் வர வேண்டும் என்பதை சபையில் பேசுவதும் தெளிவுபடுத்துவதும் முக்கியம் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதர் லிண்டா தாமஸ்-கிரீன்ஃபீல்ட் கூறினார்.

**அமெரிக்கா பின்வாங்கியிருப்பதாக இஸ்ரேல் அதிருப்தி**

போர் நிறுத்த தீர்மானத்தை வீட்டோ செய்ய அமெரிக்கா தவறியிருப்பது முந்தைய நிலைப்பாட்டில் இருந்து அந்நாட்டின் "தெளிவான பின்வாங்கல்" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

காசாவில் ஹமாஸுக்கு எதிரான போர் முயற்சிகளையும், அங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ள 130க்கும் மேற்பட்ட பணயக்கைதிகளை விடுவிக்கும் முயற்சிகளையும் இது பாதிக்கும் என்று அவர் கூறினார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்த வாரம் வெள்ளை மாளிகைக்கான இஸ்ரேலிய பிரதிநிதிகளின் பயணத்தை அதிகாரப்பூர்வமாக ரத்து செய்துள்ளார்.

ஆன்லைனில் வெளியிட்ட அறிக்கையில், "அமெரிக்காவின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாகவே" இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காசாவில் இஸ்ரேலிய தரைவழித் தாக்குதலை எதிர்பார்க்கும் முன் வரும் இந்த விஜயத்தை ரத்து செய்வதாக நெதன்யாகு முன்னர் அச்சுறுத்தியிருந்தார். இதை பைடன் நிர்வாகம் எதிர்த்துள்ளது.

**இஸ்ரேல் நடவடிக்கையால் அமெரிக்கா ஏமாற்றம்**

இந்த வாரம் அமெரிக்காவிற்கான பயணத்தை இஸ்ரேல் ரத்து செய்ததற்கு அமெரிக்கா ஏமாற்றம் தெரிவித்துள்ளது.

வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி கூறுகையில், அமெரிக்கா "மிகவும் ஏமாற்றமடைந்துள்ளது"

ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் வழங்கியுள்ள தகவலின்படி, இஸ்ரேலின் குண்டுவீச்சினால் 32,000க்கும் அதிகமான மக்கள், முக்கியமாக பெண்கள் மற்றும் குழந்தைகள் காஸாவில் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் அதிகரித்து வரும் உயிரிழப்பு எண்ணிக்கை குறித்து சமீப காலமாகவே அமெரிக்கா முன்பை விட அதிகமாக இஸ்ரேலை குற்றம்சாட்டி வருகிறது.

காஸாவில் உள்ள மக்கள் அனைவரும் உணவு இன்றி தவிப்பதாக கூறும் அமெரிக்கா, அவர்களுக்கு கூடுதல் மனிதநேய உதவிகளை செய்யுமாறு இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

மனிதநேய உதவிகளை செய்ய இஸ்ரேல் தடையாக இருப்பதாக ஐநா சபை குற்றம் சுமத்தியிருந்தது. அதே சமயம் உதவிகளை விநியோகிப்பதில் ஐநா சரியாக செயல்படவில்லை என்று இஸ்ரேல் குற்றம் சாட்டியது.

காஸாவை ஆட்சி செய்து வரும் பாலஸ்தீன இஸ்லாமியக் குழுவான ஹமாஸ், இஸ்ரேல் மீது முன்னறிவிப்பில்லா தாக்குதலை நடத்தியதில், 1200 பேர் உயிரிழந்தனர். மேலும் 253 பணயக் கைதிகளையும் பிடித்து வைத்துக் கொண்டது. அதனால், அக்டோபர் 7 தொடங்கிய போர் தற்போது வரை நடந்து வருகிறது.



# அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் பிரிந்து போட்டியிடுவதால் யாருக்கு லாபம்?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்



நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் உச்சகட்டத்தை எட்டியிருக்கும் நிலையில், மாநிலத்தில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., நாம் தமிழர் கட்சி என பல முனைப் போட்டி ஏற்பட்டிருக்கும் நிலையில் போட்டி தீவிரமடைந்திருக்கிறது.

தி.மு.க. கூட்டணியில், காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், ம.தி.மு.க., மக்கள் நீதி மய்யம், கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி ஆகியவை இடம்பெற்றுள்ளன. அ.தி.மு.க. கூட்டணியில், அ.தி.மு.க., தே.மு.தி.க, புதிய தமிழகம், எஸ்.டி.பி.ஐ. ஆகிய கட்சிகள் இடம்பெற்றிருக்கின்றன.

பா.ஜ.க. கூட்டணியைப் பொறுத்தவரை, பா.ஜ.க., பா.ம.க., டிடிவி தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய ஜனநாயகக் கட்சி, புதிய நீதிக் கட்சி, தேவநாதனின் இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம், ஜான் பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், ஓ. பன்னீர்செல்வத்தின் அணி ஆகியவை இடம்பெற்றுள்ளன. ஓ. பன்னீர்செல்வத்தின் நிலைப்பாடு தெரியாததால், பா.ஜ.க. கூட்டணியை முடிவுசெய்வது இழுத்துக்கொண்டே போனது.

நாம் தமிழர் கட்சி 40 இடங்களிலும் தனித்துப் போட்டியிடுகிறது.

எல்லா கட்சிகளுமே தங்கள் வேட்பாளர்களை அறிவித்து, பரப்புரையில் இறங்கிவிட்டன. இந்தியா கூட்டணியில் காங்கிரஸ் கட்சி மட்டும் மயிலாடுதுறை தொகுதிக்கு வேட்பாளரை இன்னும் அறிவிக்கவில்லை.

### இந்தியத் தேர்தல் வரலாற்றில் பலமுனைப் போட்டிகள்

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு தமிழ்நாட்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் இதுபோல பலமுனைப் போட்டி நிலவுவது ஒன்றும் புதிதல்ல. 1951ல் நடந்த பொதுத் தேர்தலில் துவங்கி, 1991 வரையிலான தேர்தல்களில் 1962, 1967ஆம் ஆண்டு தேர்தல் தவிர்த்த அனைத்து நாடாளுமன்றத் தேர்தல்களிலுமே இரு முனைப் போட்டிதான் நிலவியது. 1962, 1967 ஆகிய தேர்தல்களில் மட்டும் காங்கிரஸ் - தி.மு.க. - இடதுசாரிகள் என மும்முனைப் போட்டி நிலவியது.

ஆனால், 1991க்குப் பிறகு தமிழ்நாட்டில் கட்சிகள் உடைந்ததால், புதிய கட்சிகள் துவங்கப்படுவதால் காட்சிகள் மாறின. ஆகவே, 1996ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் பலமுனைப் போட்டிதான் நடைபெற்று வருகிறது.

1996ல் நடந்த தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி, தி.மு.க. கூட்டணி, ம.தி.மு.க. - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி, பா.ம.க. - திவாரி காங்கிரஸ் கூட்டணி என நான்கு முனைப் போட்டி நிலவியது. 1998, 1999, 2004, 2009 நாடாளுமன்றத் தேர்தல்களில் மும்முனைப் போட்டி நிலவியது.

ஆனால், 2014ல் தேசிய கட்சிகளுக்கும் மாநிலக் கட்சிகளுக்கும் இடையில் கூட்டணி ஏற்படாமல் போன நிலையில், அந்தத் தேர்தலில் அ.தி.மு.க., தி.மு.க., பா.ஜ.க. - தே.மு.திக. கூட்டணி, காங்கிரஸ், இடதுசாரிக் கூட்டணி என ஐந்து முனைப் போட்டி ஏற்பட்டது.

அதேபோல, 2019ஆம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க. உடைந்ததோடு, நாம் தமிழர், மக்கள் நீதிமய்யம் என புதிய கட்சிகளும் களத்தில் இறங்கியதால், அ.தி.மு.க., தி.மு.க., அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், நாம் தமிழர், மக்கள் நீதி மய்யம் என ஐந்து முனை போட்டி நிலவியது.

இப்போது, கடந்த தேர்தலில் தனியாக நின்ற கட்சிகள் கூட்டணியில் ஐக்கியமாகியிருப்பதால், மீண்டும் நான்கு முனைப் போட்டிக்கு திரும்பியிருக்கிறது தேர்தல் களம்.

ஆனால், தேர்தல் ஆய்வாளர்களைப் பொறுத்தவரை ஒரு கட்சியையோ, அணியையோ ஒரு முனையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட அளவு வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும் என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம்.

“அந்த மூன்றாவது கட்சியோ அல்லது அணியோ கடந்த தேர்தலில் ஆறில் ஒரு சதவீத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். அதாவது, ஒரு வேட்பாளர் தனது டெபாசிட்டைத் திரும்பப் பெற, பெற்றிருக்க வேண்டிய வாக்கு சதவீதமான சுமார் 16.6 சதவீத வாக்குகளைப் பெறும் கட்சியோ, அணியோதான் ஒரு முனையாக இருக்க முடியும். அப்படிப் பார்த்தால், பெரும்பாலான தேர்தல்களில் தமிழ்நாட்டில் இரு முனைப் போட்டியே நிலவியிருக்கிறது” என்கிறார் ஷ்யாம்.

“அந்த மூன்றாவது கட்சியோ அல்லது அணியோ கடந்த தேர்தலில் ஆறில் ஒரு சதவீத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். அதாவது, ஒரு வேட்பாளர் தனது டெபாசிட்டைத் திரும்பப் பெற, பெற்றிருக்க வேண்டிய வாக்கு சதவீதமான சுமார் 16.6 சதவீத வாக்குகளைப் பெறும் கட்சியோ, அணியோதான் ஒரு முனையாக இருக்க முடியும். அப்படிப் பார்த்தால், பெரும்பாலான தேர்தல்களில் தமிழ்நாட்டில் இரு முனைப் போட்டியே நிலவியிருக்கிறது” என்கிறார் ஷ்யாம்.

### எந்தெந்த தொகுதிகளில் மும்முனைப் போட்டி

கடந்த தேர்தல் முடிவுகளை வைத்துப் பார்தால், இந்தத் தேர்தலிலும் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. அணிகள் மட்டுமே அந்த அளவுக்கு வாக்கு சதவீதத்தைப் பெற்றிருந்தன.

ஆகவே, இந்த முறையும் இருமுனைப் போட்டி என்றுதான் சொல்ல வேண்டும் என்றாலும், சில தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணியின் முக்கியமான வேட்பாளர்கள் களத்தில் இறங்கியிருப்பதால், அந்தத் தொகுதிகள் மட்டும் மூன்று முனைப் போட்டியைச் சந்திப்பதாகச் சொல்லலாம்.



மிகச் சில இடங்களில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கள், கட்சியின் பொதுவான வாக்கு சதவீதத்தை விட கூடுதல் வாக்கு சதவீதத்தைப் பெறக்கூடும்.

ஒரு இடத்தில் மூன்று முனைப் போட்டி நிலவும் போது, அந்தத் தொகுதியில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களுக்கும் இடையில் வாக்குகள் பிரிந்து, அந்தத் தொகுதியில் வெற்றிபெறும் வேட்பாளரின் வாக்கு வித்தியாசம் மிகக் குறைவானதாகவே இருக்கும்.

கடந்த ஆண்டு தேர்தலில் தேனி தொகுதிதான் மிகக் கடுமையான மும்முனைப் போட்டியை சந்தித்தது. தி.மு.க. கூட்டணியின் சார்பில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனும் அ.தி.மு.க. கூட்டணியில் ஓ.பி.எஸ். ரவீந்திரநாத்தும் அ.ம.மு.கவின் சார்பில் தங்க தமிழ்ச்செல்வனும் போட்டியிட்டனர்.

இதில் ரவீந்திரநாத் 5,04,813 வாக்குகளைப் பெற்றார். ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் 4,28,120 வாக்குகளையும் தங்க தமிழ்ச்செல்வன் 1,44,050 வாக்குகளையும் பெற்றனர். ரவீந்திரநாத் 76,693 வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே வெற்றிபெற்றார்.

(வேறு சில தொகுதிகளில் வாக்கு வித்தியாசம் மிகக் குறைவாக இருந்தாலும், அவை தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு இடையிலான போட்டி கடுமையாக இருந்ததால் அம்மாதிரி நிலை ஏற்பட்டது. உதாரணமாக சிதம்பரம், வேலூர் தொகுதிகளில் அது போன்ற நிலை ஏற்பட்டது)

இந்த முறை பின்வரும் 11 தொகுதிகள் மூன்று முனை போட்டியை எதிர்கொள்வதாகச் சொல்லலாம்:

1. தென் சென்னைத் தொகுதி (தி.மு.க. சார்பில் தமிழச்சி தங்கபாண்டியன், அ.தி.மு.க. சார்பில் ஜெ.ஜெயவர்தன், பா.ஜ.க. சார்பில் தமிழிசை சௌந்தர்ராஜன்),

2. வேலூர் தொகுதி (தி.மு.க. சார்பில் கதிர் ஆனந்த், அ.தி.மு.க. சார்பில் எஸ். பசுபதி, பா.ஜ.க.கூட்டணி சார்பில் ஏ.சி. சண்முகம்),

3. தர்மபுரி தொகுதி (அ.தி.மு.க., தி.மு.க., வேட்பாளர்கள் தவிர, பா.ஜ.க. கூட்டணி சார்பில் சௌமியா அன்புமணி),

4. நீலகிரி தொகுதி (தி.மு.க. சார்பில் ஆ. ராசா, அ.தி.மு.க. சார்பில் லோகேஷ் தமிழ்ச்செல்வன், பா.ஜ.க. சார்பில் மத்திய இணையமைச்சர் எல். முருகன்),

5. கோயம்புத்தூர் தொகுதி (தி.மு.க. சார்பில் கணபதி ராஜ்குமார், அ.தி.மு.க. சார்பில் சிங்கை ராமச்சந்திரன், பா.ஜ.க. சார்பில் அக்கட்சியின் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை),

6. பெரம்பலூர் தொகுதி (தி.மு.க. சார்பில் அருண் நேரு, அ.தி.மு.க. சார்பில் என்.டி. சந்திரமோகன், பா.ஜ.க. கூட்டணி சார்பில் பாரி வேந்தர்),

7. தேனி தொகுதி (தி.மு.க. சார்பில் தங்க தமிழ்ச்செல்வன், அ.தி.மு.க. சார்பில் வி.டி. நாராயணசாமி, பா.ஜ.க. கூட்டணி சார்பில் டிடிவி தினகரன்),

8. விருதுநகர் (தி.மு.க. கூட்டணியில் சார்பில் காங்கிரசின் மாணிக்கம் தாகூர், அ.தி.மு.க. கூட்டணியின் சார்பில் தே.மு.தி.கவின் விஜய பிரபாகரன், பா.ஜ.க. கூட்டணி சார்பில் ராதிகா சரத்குமார்),

9. ராமநாதபுரம் (தி.மு.க. கூட்டணி சார்பில் முஸ்லீம் லீகின் நவாஸ் கனி, அ.தி.மு.க. சார்பில் ஜெயபெருமாள், பா.ஜ.க. கூட்டணி சார்பில் ஓ. பன்னீர்செல்வம்),

10. திருநெல்வேலி (காங்கிரசின் சார்பில் சி. ராபர்ட் ப்ரூஸ், அ.தி.மு.க. சார்பில் எம். ஜான்சிராணி, பா.ஜ.க. கூட்டணி சார்பில் நயினார் நாகேந்திரன்),

11. கன்னியாகுமாரி (காங்கிரஸ் சார்பில் விஜய் வசந்த், அ.தி.மு.க. சார்பில் நாசரேத் பசிலியான், பா.ஜ.க. கூட்டணி சார்பில் பொன். ராதாகிருஷ்ணன்).

இந்த 11 தொகுதிகளிலும் தென் சென்னை, வேலூர், நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திருநெல்வேலி, பெரம்பலூர் ஆகிய தொகுதிகளில் கடுமையான போட்டி நிலவுவதாகச் சொல்லலாம்.

பா.ஜ.கவின் முக்கியத் தலைவர்கள் போட்டியிடுவது, பா.ஜ.கவுக்கு அடிப்படையிலேயே செல்வாக்குமிக்க தொகுதியாக இருப்பது போன்ற காரணங்களால் இந்தத் தொகுதிகள் மும்முனைப் போட்டியை எதிர்கொள்கின்றன.

மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம் பேசுகையில், “அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய இரு கட்சிகளுக்கும் எல்லாத் தொகுதிகளிலும் குறிப்பிடத்தக்க வாக்கு சதவீதம் உண்டு. இதைத் தாண்டி மற்றொரு கட்சியின் வேட்பாளர் வெற்றிபெற வேண்டுமென்றால் நன்கு அறியப்பட்டவர்களாக, தொகுதிக்குள் தொடர்ந்து பணியாற்றியவர்களாக இருக்கவேண்டும்.

அவர்களுக்கு எதிரான அம்சங்கள் ஏதும் அந்தத் தொகுதியில் இருக்கக்கூடாது. அப்படிப் பார்க்கும்போது நயினார் நாகேந்திரன், டி.டி.வி. தினகரன், ஏ.சி. சண்முகம், பாரிவேந்தர், பொன். ராதாகிருஷ்ணன் ஆகியோர் மூன்றாவது முனையில் கடுமையான போட்டியைக் கொடுப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் அவரவர் தொகுதியில் செல்வாக்கைப் பெற்றவர்கள்.

நீலகிரியில் நிற்கும் எல். முருகனும் கோயம்புத்தூரில் நிற்கும் கே. அண்ணாமலையும் நட்சத்திர வேட்பாளர்களாக இருக்கலாம். ஆனால், அவர்களுக்கு சாதகமல்லாத அம்சங்கள் அந்தத் தொகுதிகளில் உண்டு. நீலகிரி தொகுதியில் உள்ள மலையக மக்களின் வாக்குகளை எல். முருகனால் பெற முடியுமா என்பது சந்தேகம்தான்.

அதேபோல, கோயம்புத்தூரில் அ.தி.மு.கவுக்கும் தி.மு.வுக்கும் உள்ள கட்சிக் கட்டமைப்பைத் தாண்டி அடிமட்டத்தில் பா.ஜ.கவால் பணியாற்ற முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும்.

தவிர, இந்தத் தேர்தலில் அ.தி.மு.க., தி.மு.க., பா.ஜ.க. கூட்டணி தவிர, நாம் தமிழரும் களத்தில் நிற்கிறது. இரு திராவிடக் கட்சிகளையும் பிடிக்காதவர்கள் நாம் தமிழருக்குப் வாக்களிப்பார்களா, பா.ஜ.கவுக்கு வாக்களிப்பார்களா என்பது முக்கியமான கேள்வியாக இருக்கும்” என்றார்.

### இம்மாதிரியான மும்முனைப் போட்டிகளில் வெற்றிவாய்ப்பு யாருக்கு?

“பொதுவாகத் தேர்தல் முடிவுகளை யாரும் கணிக்க முடியாது. இருந்தபோதும், பல முனைப் போட்டி இருக்கும்போது, அ.தி.மு.க., தி.மு.கவின் அடிப்படையான வாக்கு வங்கி அவர்களுக்குச் சென்றுவிடும். மீதமுள்ள வாக்குகளை மற்ற கட்சிகள் எல்லாம் பிரித்துக்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், இதையெல்லாம் தாண்டி கட்சிகளின் பிரச்சாரம், மக்களிடையே உள்ள அதிருப்தி ஆகியவையும் முடிவுகளை தீர்மானிக்கும் முக்கிய காரணியாக இருக்கும்” என்கிறார் ஷ்யாம். ●